முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௭ | 23-10-59 வெள்ளி | ஒலி: 26

பகையழிக்கும் முரசு முழங்குது;
படை எடு, தடை உடை - என்றே!

சென்னை மாநாட்டில் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் பேசிக் கொண்டிருக்கிறார்.

பண்டிதர் பிடிவாதம் உடைபட்டது!

பம்பாய் மாநிலம் பிளவுபடுகிறது!

இந்தியத் துணைக் கண்டத்திலே மொழி அடிப்படையில் இராஜ்யங்கள் அமைதல் வேண்டும் என்ற கருத்து நீண்ட நெடுங்காலமாய் பல்லோராலும் பேசப்பட்டுவந்த ஒன்றாகும். ஆங்கில ஏகாதிபத்தியம் உருவாக்கித் தந்த இந்தியா சிதையாமலிருப்பதற்காக, ஆங்கில ஏகாதிபத்திய ஒழிப்பு இலட்சியத்தைக்கொள்கையாகக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி, இந்தியாவில் மொழி வழி அமையும தனித்தேசியம் தளிர்க்காமல் பட்டுப்போக மொழிவழி அரசுகள் அமைவதை ஆதரித்து வந்தது.

1905-ம் ஆண்டில், வங்காளம், துண்டிக்கப்படக்கூடாது என்று காங்கிரஸ் கட்சி போராடியதிலிருந்தே மொழிவழி இராஜ்யம் அமைதல் வேண்டும் எனும் விழுமிய கொள்கைக்குத் தன்னை மறைமுகமாகக்கட்டுப்படுத்திக் கொண்டது.

1908-ம் ஆண்டில் பீகாரில் தனிப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி வேலை செய்ய ஒத்துக் கொண்டதன் மூலமாக, 1917-ம் ஆண்டில் சிந்துவிலும், ஆந்திராவிலும் தனிப் பிரதேச காங்கிரஸ் கமிட்டிகள் இயங்க அனுமதித்ததின் விளைவாக மொழிவழிக் கொள்கையை அகில இந்திய காங்கிரஸ் கட்சி கடைப்பிடிக்கத் துவங்கிவிட்டது என்ற எண்ணம் மேலும் பலப்பட்டது.

ஆனால், 1920-ம் ஆண்டிலே நாகபுரியில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில்தான், இந்தியாவில் இராஜ்யங்கள் மொழி ரீதியாக உருவாக வேண்டும் எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கட்சியும் அந்த அடிப்படையில் முழுதும் அமைக்கப்பட்டது.

1928-ல், அனைத்துக் கட்சிகளின் மாநாட்டினால் ஏற்படுத்தப்பட்ட, மோதிலால் நேருவைத் தலைவராகக் கொண்ட குழுவின் அறிக்கை மொழி அடிப்படையில் ராஜ்யங்கள் சீரமைக்கப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக வலியுறுத்தியது.

இவ்வாறு, ஆங்கில ஏகாதிபத்திய ஒழிப்புப் போராட்டக் காலத்தில் மொழிவழி அரசு அமைவதை கட்சி வேற்றுமையின்றி எல்லோரும் விரும்பி ஏற்றுக்கொண்டு பெரும்பணியாற்றியதோடு, இராஜ்ய அரசாங்கங்களுக்கு அதிக அளவில் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் பாக்கிஸ்தான் தனி நாட்டுக் கோரிக்கை முஸ்லீம்களின் இதய இலட்சியமாக வளர வளர, அக் கொள்கையின் தீவிரத்தை, வலுவைக் குறைக்க வேண்டி மாநில ராஜ்யங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டு, இந்தியாவின் மத்திய சர்க்கார் வலுவற்ற நிலையில் அமையும் கூட்டாட்சிக் கொள்கை காங்கிரஸ் கட்சியால் தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

பாக்கிஸ்தான் தனி நாடாக அமைவதற்கு மாருக, இராஜ்யங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட்டு இந்தியத் துணைக் கண்டம் விடுதலையுறுவது பல்வேறு இனங்களுக்கும், குறிப்பாக முஸ்லீம்களுக்கும் தக்க பாதுகாப்பாக விளங்கும் என்ற கொள்கையை, பாக்கிஸ்தான் உருப்பெற்றுத்திகழ்ந்த பின்னர் வெட்கக்கேடான வகையில் காங்கிரஸ் கட்சி பகிரங்கமாகக் கைகழுவத் தொடங்கியது.

1948—ம் ஆண்டில் தார் கமிஷன், இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பித்த அறிக்கையில் மொழிவழி இராஜ்யக் கொள்கையைக் கடுமையாகக் கண்டித்தது.

1949—ல் காங்கிரஸ் கட்சி நிறுவிய நேரு, பட்டேல், பட்டாபி சீதாராமையா ஆகிய மூவர் கொண்ட குழு மொழிவழி இராஜ்யக் கொள்கையை தேவையற்றது, தீதானது என விளக்கி, தார் கமிஷன் அறிக்கையை ஏற்றுக்கொண்டது. காங்கிரஸ் கட்சியும் நேரு, பட்டேல், பட்டாபி அறிக்கையை அங்கீகரித்தது.

சிலம்பு

1905—ம் ஆண்டு முதல் காங்கிரஸ் கட்சி பேசி வந்த இலட்சியம், இந்தியா ஒன்று என்று கூறுவதற்கு அந்தச் சமயத்தில் பெருந்தடையாக விளங்கிய பாக்கிஸ்தான் கோரிக்கை முழு வெற்றி பெற்றதற்குப் பின்னுலே கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிடப்பட்டது.

காங்கிரஸ் கட்சி இந்தியா முழுவதிலும் ஆங்கில ஏகாதிபத்திய ஒழிப்புக் கொள்கை ஒரே சமயத்தில் தீவிரமாகப் பரவ வேண்டும் என்பதற்காக மொழி வழி இராஜ்யக் கொள்கையை மேற்பூச்சுக்காக வேறு பலபகுதிகளையும் திருப்திப் படுத்த வேண்டியே பேசி வந்தது என்பது ஆங்கிலேய ஏகாதிபத்தியம் ஒழிந்ததற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் நிதர்சனமாக்குகின்றன.

என்றாலும், பாக்கிஸ்தான் அமைந்ததற்குப் பின்னரும், இந்தியாவின் எஞ்சியுள்ள பிரிவு நிலைமைகள்—வேற்றுமைச் சக்திகள் பலமாகப் போராடி இந்தியாவில் மொழிவழி இராஜ்யங்கள் உருவாக இராஜ்ய சீரமைப்புக் குழுவை இந்திய சர்க்கார் அமைப்பதில் வெற்றி கண்டன.

இராஜ்ய சீரமைப்புக் குழு சமர்ப்பித்த அறிக்கையின் விளைவாக பமபாய் மாநிலத்தைத் தவிர ஏனையப் பகுதிகளில் மொழி அடிப்படையில் பொதுவாக இராஜ்யங்கள் உருவாயின.

இராஜ்ய சீரமைப்புக் குழு தன்னுடைய அறிக்கையை 1955ல் வெளியிட்ட சமயத்திலும், இருமொழி பம்பாய் இராஜ்யம் அமைந்த நேரத்திலும் தெளிவான கொள்கை இல்லாததின் விளைவாக ஜவகர்லால் நேருவின் தடுமாற்றத்தையும், பலவீனத்தையும் நாட்டு மக்கள் அனைவரும் எளிதில் அறிந்து கொண்டனர்.

இருமொழி பம்பாய் இராஜ்யத்தைமூர்த்தண்யமாக எதிர்த்து தனி மராட்டிய இராஜ்யமும், தனிக் குஜராத்து மாநிலமும் அமைய வேண்டும் என்று அப்பகுதி மக்கள் பெருங் கிளர்ச்சி செய்தனர்.

மொரார்ஜி தேசாய் நூற்றுக் கணக்கிலே மனித உயிர்களைப் பலி வாங்கினர். கொடிய அடக்கு முறைகளைக் கையாண்டார். கடைசியில் பட்டினியும் கிடந்தார்!

ஜவகர்லால் நேருவோ கிளர்ச்சிக்காரர்களை குரங்குகள், கோட்டான்கள், இழி பிறவிகள், காட்டுமிராண்டிகள் என்று திட்டித் தீர்த்தார்.

இந்தியாவின் பொருளாதார அமைச்சராக அவ்வமயம் பணியாற்றிய தேஷ்முக் அவர்கள் மிருகத்தனமான அடக்குமுறையைக் கண்டித்து, தனி மராட்டிய ராஜ்யம் அமைய வேண்டி தன்னுடைய அமைச்சர் பதவியை இராஜினமா செய்தார்.

என்றாலும் பம்பாய் இருமொழி இராஜ்யம் காங்கிரஸ் கட்சியினரால் பாராட்டப்பட்டது; சீராட்டப்பட்டது; போற்றப்பட்டது!

கடந்த பொதுத் தேர்தலில் அம் மாநிலத்தில் இருமொழி இராஜ்ய அமைப்பின் விளைவாக காங்கிரஸ் கட்சி தன்னுடைய தனிப் பெருஞ் செல்வாக்கை இழந்து, பல இடங்களில் தோல்வியை அவக்கேடான முறையில் அணைத்துக் கொள்ள நேரிட்டது.

மேலும், மாராட்டியப் பகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல்கள் அனைத்திலும் காங்கிரஸ் கட்சி தோல்விகளையே சந்தித்து வருகின்றது.

இந்த நிலையில், தன்னுடைய அதிகாரம் சிதைவதைக் கண்டு, செல்வாக்குப் பறிபோவதை அறிந்து, ஆதிக்கம் குலைவதை உணர்ந்து இருமொழி பம்பாய் இராஜ்யத்தை மக்களின் நீண்டகால பெரு விருப்பத்திற்கிணங்க மாராட்டிய மாநிலமாக அமைவதை மீண்டும் பரிசீலிக்கும் நிலைமைக்குக் காங்கிரஸ் கட்சி துரத்தியடிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நேருவும், அவருடைய அருமந்த புதல்வியும், காங்கிரஸ் கட்சியின் தலைவியுமான இந்திரா காந்தியும் பம்பாய் இரு மொழி ராஜ்யம் சீரமைக்கப்பட வேண்டும் என்பது குறித்துப் பேசி வருகின்றனர். இந்தப் புதிய போக்கையொட்டி இந்திய சர்க்காரும் ஓரிரு திங்களில் திட்டவட்டமான காரியங்களில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொழிவழி இராஜ்யக் கொள்கையை கண்டித்துப் பேசுவது ஒரு பக்கம். அதே தருணத்தில் அவ்வடிப்படையில் பம்பாய் மாநிலத்தைச் சீரமைக்கப் போவது இன்னொரு பக்கம்—இச்சந்தர்ப்பவாதப் போக்கினல் காங்கிரஸ் கட்சி தன்னுடைய செல்வாக்கை நிச்சயம் மீட்டுக்கொள்ள முடியாது. பொது மக்களும் ஆதரவை மீண்டும் வழங்கப் போவதும் இல்லை.

நம்மைப் பொறுத்த மட்டில், எந்த நிலைமைகளிலும் மொழிவழி இராஜ்யம் அமைவது விரும்பத் தக்கதாகும். ஒவ்வொரு மொழி பேசுவோரும் பல்வேறு மாநிலங்களில் சிதறுண்டு கிடந்த நேரத்தில், தங்களுடைய வாழ்வு மலராமல் கருகிக்கொண்டேயிருப்பதற்கு வேறு மொழிக்காரர்களே காரணம் எனக் கருதி வந்தனர். ஆனால், தற்சமயம் ஒவ்வொரு மொழிக்காரர்களும் டில்லி ஆதிபத்தியப் போக்கை உணரத் தலைப்பட்டு விட்டனர்.

எனவே, தனி மொழி இராஜ்யங்கள் தங்களுடைய அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் காலம் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. அந்த வகையில் தனி மராட்டிய ராஜ்யம், தனி குஜராத் மாநிலம் அமைவதை பழந்தமிழர் — திராவிடர்கள் அனைவரும் வரவேற்பர்!

வெள்ளி 23—10—59 சென்னை

சிதம்பர ரகசியம்!

சிதம்பரத்தில் நடைபெற்று முடிந்த இடைத்தேர்தலின் முடிவு, ஆட்சியிலே வீற்றிருக்கும் கட்சி எப்படியும் வெற்றி பெற்று விடும் என்ற உண்மையை உணர்த்துவதற்கு மேலும் ஒரு ஆதாரமாக விளங்குகிறதே தவிர, நமக்கு எவ்வித அதிர்ச்சியையும் அளித்திட வில்லை.

காங்கிரஸ் கட்சி, இந்த வெற்றியின் ரகசியத்தை முக்காட்டுக்குள் வைத்திருக்கவே முயன்றாலும் தொகுதியிலிருப்பவர்களும், தொகுதியின் ஓரத்தில் வாழ்பவர்களும் வெற்றிக்கான காரணத்தை நன்கு புரிந்துகொண்டிருக்கின்றனர்.

பெரியவர் சகஜானந்தா அவர்கள் மறைந்ததை யொட்டி இந்த இடைத்தேர்தல் நடைபெற்றது. தனித் தொகுதிக்கான இந்தத் தேர்தலில் நமது கழகத்தைச் சேர்ந்த புலவர் ஆறுமுகம் போட்டியிட்டார்.

சென்ற தடவை சகஜானந்தாவை எதிர்த்துத் தோல்வி கண்ட சிவசுப்பிரமணியம் என்பவருக்குப் புதிய கதராடை அணிவித்துக் களத்திற்கு அழைத்து வந்தனர் காங்கிரசார்.

வழக்கறிஞர்கள் சாமிநாதன், வில்லாளன் எடுத்துக் காட்டிய சட்டம் அவரது தகுதியை ஆய்ந்து போட்டியிடலாகாது எனத் தடுத்து விட்டது. ஆறேர் அரசன் என்று ஒருவரைப் பிடித்தனர். இரவோடு இரவாக சட்டைக்கு அளவெடுத்து, மறுநாள் காலையில் கதர்ச் சொக்காய்க்குள் அவரது உடலை மாட்டி, இவரே காங்கிரஸ் மகாசபையின் அபேட்சகர் என்று பறைசாற்றினர். கூலிக்கு மாரடிக்கும் கட்சிகள் சில காங்கிரசுக்கு 'வோட்டு' சேகரிக்க முன் வந்தன.

பொதுத்தேர்தலில் காங்கிரசை எதிர்த்த தமிழரசுக் கழகம் இடைத்தேர்தலில் காங்கிரசுக்கு பிரச்சாரக் கருவியாயிற்று.

திராவிடர் கழகப் பெரியாரும் மூவாயிர ரூபாய் பண முடிப்பு பெற்றுக்கொண்டு சிதம்பரம் தேர்தலில் காமராசர் கரத்தை வலுப்படுத்துங்கள் என்று கேட்டுக்கொண்டு தன் கடமையை முடித்துக் கொண்டார்.

ஆதரித்துப் பேச வந்தவர்கள் எல்லாம் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், வெற்றிக்குக் காரணம் தங்களின் வீரமுழக்கம்தான் என்று!

வெள்ளிப் பணத்தை அள்ளிவிட்ட காங்கிரஸ் மூலவர்களுக்குத் தெரியும் உண்மையான காரணம்! எதிர்த்து நின்ற நமக்கும் தெரியும் எப்படி வென்றார்கள் என்ற செய்தி.

காங்கிரசார் ஐம்பத்து மூவாயிரம் வோட்டுக்கள் பெற்றிருக்கிறார்கள். வோட்டுக்களா அவைகள்? அல்ல! அல்ல! கொட்டிய சில்லறைப் பணத்துக்கு மாற்றப்பட்ட கோட்டுக்கள்! நாம் பெற்ற வோட்டுக்கள் நாற்பதாயிரத்து சொச்சம் காணாறு! மனதில் மாசில்லாதவர் காசின்றிப் பெற்ற ஆதரவு இது!

கடந்த பொதுத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் தனித் தொகுதிக்கு நாம் போட்டியிடவில்லை. பொதுத் தொகுதிக்கு மட்டுமே போட்டியிட்டோம். அப்போது காங்கிரசின் சார்பில் நின்ற திரு. வாகீசம் பிள்ளை வாங்கிய வோட்டுக்கள் 37225. கழக நண்பர் பொன். சொக்கலிங்கம் பெற்ற வோட்டுக்கள் 30345. தனித் தொகுதியில் காங்கிரசின் சார்பில் போட்டியிட்ட சகஜானந்தா பெற்றவை 37089 வோட்டுக்கள்.

அந்த நிலையுடன் இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது சிதம்பரம் தொகுதியில் கழகம் வளர்ச்சியடைந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. நாம் பத்தாயிரம் வாக்குகள் அதிகம் பெற்றிருப்பது போலவே காங்கிரசும் பதினாறு ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றிருக்கிறதே; அங்ஙனமாயின் காங்கிரஸ் கட்சியும் அந்த வளர்ந்திருப்பதாகத்தானே பொருள் என்று வாதிடக்கூடும். இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருந்த ஒரு கட்சி, இடைத்தேர்தலில் பெரும் பணக்காரரான வாகீசம் பிள்ளையின் சட்டமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தியதோடல்லாமல் நாடாளும் மந்திரிகளின் பதவியையும், அதிகார வர்க்கத்தையும் துஷ்பிரயோகம் செய்து கொண்ட ஒரு கட்சி, போன தேர்தலில் தோற்றுவிட்ட கழகத்தினர் இந்தத் தடவை அதிகம் பெற்ற வாக்குகளைவிட ஆறாயிரம் வாக்குகளை அதிகம் பெற்றிருக்கிறது என்றால் இது காங்கிரஸ் கட்சியினர் பூரிப்படையக்கூடிய முடிவா? பதின்மூன்றாயிரம் வாக்குகளை அதிகம் பெற எந்த அளவுக்கு ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது!

இங்கிலாந்தில் தேர்தல் நடைபெற்று முடிந்தது. மாக்மில்லன், மாக்மில்லனாகவே தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டாரே தவிர மந்திரி மாக்மில்லனாக வெளிவரவில்லை. மந்திரி பதவியைத் துறந்துவிட்டே தேர்தலில் குதித்தார். பொதுத் தேர்தல் நேரத்திலேயே அந்த முறையைக் கடைப்பிடிக்க அஞ்சி நடுங்கும். இங்குள்ள ஜனநாயகவாதிகளாம் காங்கிரஸ் மந்திரிகள், இடைத்தேர்தல்களில் எவ்வளவு பகிரங்கமாகத் தங்கள் பதவியைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று விளக்கவும் வேண்டுமோ?

பதவி, பயமுறுத்தியது சில இடங்களில்!

பல்லைக்காட்டியது பல இடங்களில்!

அதிகார வர்க்கம் ஆங்காங்கு தன் நீண்ட கரங்களைவிட்டு வாக்குச் சேகரிக்கும் பணியில் தீவிரம் காட்டியது.

தி. மு. கழகமென்றால் வன்னியர்களின் கட்சியென்று ஆதித் திராவிட மக்களிடம் பகிரங்கமாகப் பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்டு "முதுகுளத்தூர்" உண்டாக்கும் முயற்சியும் நடைபெற்றது. தோற்றாலும் பரவாயில்லை—அப்படி ஒரு நிலை மூளவேண்டாமென்று நினைத்த கழகத்தவர், பல தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தேர்தல் பிரச்சாரம் செய்தலும் தீமை விளைவிக்க கூடும் என எண்ணி அந்தப் பகுதிகளுக்குப் போகாமலே இருந்து அமைதி காக்க விரும்பினர்.

அப்படியிருந்தும் குமராட்சி யெனும் இடத்தில் அம்மையார் சத்திபவாணிமுத்து கூட்டத்தில் குழப்பம் விளைவித்தனர். பேராசிரியர் அன்பழகனும், பொன். சொக்கலிங்கமும், கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்களும் சென்ற காரைக் கவிழ்க்க முயற்சித்தனர். அரிவாள், கட்டாரி, கம்புகளுடன் காங்கிரஸ் குண்டர்கள் பல இடங்களில் மிரட்டல் வேலையில் ஈடுபட்டிருந்தனர். திரு. கக்கனுக்குக் கிடைத்த அபூர்வமான மந்திரிப் பதவியின் மகிமை, சிதம்பரம் தொகுதி சேரிகளில்தான்—நந்தனார் வீழ்ந்த தீக் குண்டத்து ஜோதி போலப் பிரகாசித்தது என்று கூறலாம்.

பஸ் முதலாளிகளின் பணம் விளையாடிற்று. அந்த விளையாட்டில் விளக்கை நெருங்கிய விட்டில் பூச்சியாயினர் வாக்காளர் பெருமக்கள். இந்தக் காரணங்களில்லாமல் வேறு எதற்காக அவர்கள் காங்கிரசுக்கு வாக்கு அளித்திருக்க முடியும்?

வீசை 14 அணா விற்ற புளி, இப்போது இரண்டேமுக்கால் ரூபாய் ஆகியிருக்கிறதே; அதற்காகவா?

வீசை 3 ரூபாய்க்கு விற்ற மிளகாய், ஐந்து ரூபாய் ஆகிவிட்டதே அதற்காகவா?

வெல்லம் வீசை ஒரு ரூபாய் ஆறு அணா என்கிறார்களே; அதற்காகவா?

அரிசி படி 14 அணாவுக்குமேல் ஏறுகிறதே; அதற்காகவா?

எந்த வகையிலும் வாழ்க்கைப் பிரச்னையில் நிம்மதி காண முடியாமல் தவிக்கிற மக்கள் காங்கிரசை வெற்றி பெற வைத்திருக்கிறார்கள் என்றால் என்ன காரணம்?

முரட்டுக் குணம்படைத்தவன் இருட்டு வேளையில் குருட்டுப் பெண் ஒருத்தியைக் கற்பழித்துவிட்டுக் களிபேருவகை அடைவதற்கும்—ஜனநாயகத்திற்குப் புறம்பான. முறையில் காங்கிரஸ், ஏழை மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிப் புன்னகை புரிவதற்கும் துளி வேறுபாடும் இல்லையெனலாம்.

இந்த வெட்கங்கெட்ட வெற்றிக் சித்தாப்புக்காகத் தேர்தல் நடத்துவதைவிட இந்தத் தொகுதிக்கு "இவர்தான் எங்கள் எம். எல். ஏ." என்று நியமித்துவிட்டு, "வாழ்க ஜனநாயகம்!" என்று ஆளவந்தார் முழங்கிக் கொண்டிருக்கலாம். கீ

அன்புள்ள மாதவி,

"வால்டேரிடம் ஒரு உலகம் முடிவடைகிறது; ரூசோவிடம் ஒரு புது உலகம் ஆரம்பமாகிறது!"

—இப்படித்தான் குறிப்பிடுகிறான் ஜெர்மன் கவிஞன் கத்தே. வால்டேர் பிரஞ்சுப் புரட்சிக்கு வித்தூன்றினர். ரூசோ, அது வளர்ந்து பலன் தருவதற்கான சாதனங்களை அமைத்துக் கொடுத்தார்; சூழ்நிலைகளை உருவாக்கினர். வால்டேரும் ரூசோவும் ஒரே ஆண்டில் இறந்து போனார்கள். அவர்கள் இறந்து பதினோரு ஆண்டுகளுக்குப் பிறகு பிரஞ்சுப் புரட்சி உதயமாயிற்று. இப்படி வரலாற்றில் மகத்தானதொரு புரட்சிக்குக் காரணமாயிருந்தவர்களின் எழுத்திலும் வாழ்க்கை முறையிலும் ஒற்றுமையாயிருந்த அம்சங்கள் மிக மிகக் குறைவு.

1712-ம் ஆண்டு, ஸ்விஸ்ட்சர்லாந்து நாட்டின் தலைநகரான ஜெனீவாவில், ஜீன் ஜேக்குவஸ் ரூசோ பிறந்தார். அவருடைய தந்தை கடிகாரத் தொழிலில் ஈடுபட்டிருந்தார். ரூசோ பிறந்த பதினைந்து நாட்களுக்குள் தாய் மரணமடைந்தாள். இந்த விளையும் பயிர் முளையிலே தெரியவில்லை! சிறுபிள்ளைப் பருவத்தில் வால்டேரைப் போல் ரூசோ சூட்டிகையாக இருக்கவில்லை. அவருக்கு நாற்பது வயதான பொழுதுதான் அவருடைய மேதா விலாசத்தை மக்கள் உணரத் தொடங்கினர். 1762-ம் ஆண்டில் அவர் வெளியிட்ட "சமுதாய ஒப்பந்தம்" என்ற நூலே அரசியல் உலகையும் ஐரோப்பிய சிந்தனையாளர்களையும் ஒரு கலக்குக் கலக்கியது. அதைத் தொடர்ந்து அவர் வெளியிட்ட பல நூல்கள், அவரது தனிவழிச் சிந்தனையை தெள்ளிதின் விளக்கின. ரூசோ, பிரச்சினைக்குரிய ஒரு மனிதரானர்.

தாயற்ற ரூசோ, தந்தையாலும் கைவிடப்பட்டு, சிறிய தந்தையின் பராமரிப்பிலே வளர்ந்தார். பத்து வயதுப் பாலகனாக இருக்கும்பொழுதே, தனக்குப் போதகாசிரியராக இருந்தவருடைய சகோதரியின் மீது ரூசோவுக்கு இனம் புரியாத அன்பு ஏற்பட்டது. அப்பொழுது அவளுக்கு வயது முப்பது. இந்த அன்பின் தன்மை — ரூசோவின் மனவுணர்ச்சிகளைப் பெருமளவு பாதித்தது. சீர்குலைந்துபோன மனவுணர்ச்சிகள் செம்மைப்பட, தம்முடைய பதினாறும் வயதில், கத்தோலிக்க மதத்தைத் தழுவினர் தன்னுடைய மத அறிவு முழுமை பெற வாரன் சீமாட்டி என்ற அம்மையாரிடம் போய்ச் சேர்ந்தார். அந்த அம்மையாரும் அப்பொழுதுதான் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்து அம்மத அறிவைப் பூரணமாக பெறுவதில் பெருமுனைப்புக் காட்டி வந்தார்.

வாரன் சீமாட்டி செல்வத்தில் புரண்டு கொண்டிருந்தவள். சீரிளமைத் திறம குன்றா விதவை. வயதோ இருபத்தி எட்டுதான்! கணவனிழந்த அந்த இளம் காரிகை, கனவு காணும் கண்களும், கட்டுக் கட்டாக வளர்ந்து செழித்த கரிய கேசமும், பளிங்கு நிறமும், பாவையரைப் பரவசப்படுத்தும் காந்த இளமையும் கொண்ட ரூசோவிடம் மனத்தைப் பறிகொடுத்தாள். கலைகளை அவருக்குக் கற்று கொடுக்க காசை வாரி இறைத்தாள்.

ரூசோ கலை பல பயின்றார். வாரன் சீமாட்டியின் பராமரிப்பிலே, அவர் அனுபவித்த வாழ்க்கைச் சுவைகள் ஏராளம், ஏராளம்! அவளுடைய புகழ் பாடினார்; புகழ்ப் போதையிலே கிளுகிளுத்தாள் பூவை! ஆனாலும் ஒரு வித விசித்திர மனப்போக்குக் கொண்ட ரூசோவால், அவளுடன் தொடர்ந்து வாழமுடியவில்லை. அவளை விட்டுப் பிரிந்து லட்சியமில்லா மரக்கலம்போல் கண்ட கண்ட இடமெல்லாம் அலைந்தார். அலுத்துக் களைத்த போது அவளையே தஞ்சமென்று அடைவார். கடந்த காலத்தை மறந்துவிட்டு, நிகழ்காலம் நழுவி விடாமல் இருக்க, அவளும் அவரோடு குலவினாள். வேரூன்று இக் காதல் நிலைத்து நீடிக்கவில்லை. 1742—ம் ஆண்டு அவலட்சணமும் அறியாமையும் மிக்க தெரிசா என்ற பணிப்பெண் ஒருத்தியை ரூசோ திருமணம் செய்துகொண்டார். ஸ்திரபுத்தியற்ற ரூசோவின் விளக்கம் காணமுடியாத திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று! இத்திருமணத்தின் விளைவாக அவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. குழந்தைகளுடைய செலவை குறைப்பதற்காக

நல்ல சர்க்கார் ஆளப்படுகிறவர்களின் சம்மதம் பெற்றுத்தான் ஆட்சி புரிய வேண்டுமென்ற கொள்கையை வலியுறுத்தியிருந்தார். அதாவது, அரசாங்கம் மக்கள் பிரதிநிதித்வம்பெற்ற ஜனநாயக அரசாங்கமாக இருக்க வேண்டுமென்றார். நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஓட்டுரிமை பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசு முறையை—ரிபப்லிகன் கவர்மெண்ட்டை—அவர் ஆதரித்தார். 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம்' ஆகிய மூன்று அடிப்படைகள் அவருடைய நூலின் அஸ்திவாரமாக அமைந்தன. அவர் குறிப்பிட்ட அந்த மூன்று சொற்கள் தான் பிரஞ்சுப் புரட்சியின்போது மக்களின் கோஷமாக மாறி, பாரீஸ் நகர வீதிகளிலே எதிரொலித்து, பயங்கரச் சிறையான பாஸ்டில்லி சிறையை உடைத்தெறிந்தது. "சுதந்திர புருஷனாக மனிதன் பிறக்கிறான்; ஆனால் எல்லா இடங்களிலும் அவன் அடிமையாக வாழ்கிறான்," என்ற வரிகளோடுதான் ரூசோவின் 'சமுதாய ஒப்பந்தம்' என்ற நூலே ஆரம்பமாகிறது.



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

55. சிந்தனைச் சிற்பி ரூசோ

அவைகளை அனாதை விடுதியில் சேர்த்து விட்டார். 'எமிலி' என்ற ஒப்பற்ற நூலொன்று எழுதி, குழந்தைகளைப் பெற்றோர்கள் எப்படி வளர்க்க வேண்டும்; கல்வி புகட்ட வேண்டும் என்றெல்லாம் உலகுக்குப் போதித்த ரூசோ, தன்னுடைய குழந்தைகளை நிராதரவாக்கிய செயல் எவரும் புரிந்து கொள்ள இயலாத புதிராகவே உள்ளது!

1750—ம் ஆண்டு, பிரஞ்சு நாட்டு அரசாங்கம் பென்ஷன் கொடுத்து அவரை ஆதரிக்க முன்வந்தது. அரசாங்க உதவிப் பணத்தைப் பெற்றுத் தன்னை அரசாங்கத்துக்கு அடிமைப்படுத்திக் கொள்ள விரும்பாத ரூசோ, அரசாங்க உதவியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். அதற்குப் பிறகுதான் "வேற்றுமைகளின் பிறப்பிடம்" என்ற நூலை எழுதினர். கத்தோலிக்க மதத்தையும் கைகழுவினர்.

1762—ம் ஆண்டில் அவர் எழுதி வெளிபிட்ட "சமுதாய ஒபபந்தம்" என்ற நூல், அரசியல் உலகில் பெரிய பரபரப்பை உண்டாக்கியது. மன்னராட்சியின் போலித்தன்மைகள் அம்பலப்படுத்தப்பட்டு, மக்களாட்சி மலர வேண்டியதற்கான அவசியத்தை அந்த நூல் தெளிவாக எடுத்துக்காட்டியது. ஐரோப்பாவில் முடியாட்சி வீழ்ச்சியடைந்து குடியாட்சி தோன்றவும், மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சியடையவும் அந்த நூலைப்போல் வேறெந்த நூலும் காரணமாயிருந்ததில்லை. ஒரு

ரூசோ இத்துடன் நின்றுவிடவில்லை. குழந்தைகளின் கல்வியும் வளர்ப்பும் எப்படி இருக்க வேண்டுமென்பதை விளக்கும் வகையில் 'எமிலி' என்றொரு நூல் எழுதி வெளியிட்டார். அதுவரையில் கல்வி போதனை பற்றி மக்கள் கொண்டிருந்த கருத்துக்களில் புரட்சிகரமான மாறுதல்களை ரூசோ செய்ய முயன்றார். அந்தக்காலத்தில் லத்தீன் இலக்கண விதிகளை நெட்டுருச் செய்வதும், மதக்கோட்பாடுகளைப் பாடம் செய்வதுமே கல்வியின் அடிப்படைகளாக விளங்கின. உடற்பயிற்சி, உணவுப் பழக்க வழக்கங்கள், சுகாதாரம் ஆகியவற்றிலும் கல்வி போதனை கவனம் செலுத்த வேண்டுமென்று ரூசோ எடுத்துரைத்தார். அறிவுப்பயிற்சி, ஒழுக்க போதனை போலவே மேற்கண்டவற்றிலும் அக்கரை செலுத்த வேண்டுமென எடுத்துச் சொன்னார். "இயற்கை எல்லாவற்றையும் நல்லனவாகவே படைக்கிறது. மனிதனின் கரம்பட்டே எல்லாப் பொருட்களும் சிறப்படைகின்றன," என்ற வரிகளோடுதான் 'எமிலி' என்ற நூல் ஆரம்பமாகிறது. இயற்கையின் பராமரிப்பில் விடப்படுகின்ற குழந்தையே முழு மனிதனாக முடியும் என்பது ரூசோவின் நம்பிக்கை. தாயின் முழுப் பாசத்தில் குழந்தை மனவளர்ச்சி அடைய வேண்டும். தனது ஐம்புலன்களையும் பயன் படுத்தி, குழந்தை தானாக அறிவு பெறக் கல்வி உதவ வேண்டும். கல்வி போதனையில் தண்டனையே இடம் பெறக் கூடாது. இன்ப துன்பங்களை அனுபவித்துக் குழந்தை பயிற்சி பெற வேண்டும். உடலுழைப்பின் பெருமையை சிறுவர்கள் உணர வேண்டும். மனோதத்துவ ரீதியில் கல்வி போதனையை அமைத்த பெருமை ரூசோவையே சாரும். பெஸ்டலாட்சி, ஃபுரோபெல் போன்ற கல்வி நிபுணர்களெல்லாம் பிற்காலத்தில் ரூசோவின் கல்வி முறையைப் பாராட்டிப் பின்பற்றினார்கள். 'எமிலி' இன்றுவரை கல்வியுலகில் ஒரு கலங்கரை விளக்கமாய் நின்று வழிகாட்டிக் கொண்டிருக்கிறது.

ரூசோவின் புரட்சிகரமான நூல்கள் பிரான்சில் அவருக்குப் பெரும் எதிர்ப்பைத் தேடிக் கொடுத்தன. அவர் இங்கிலாந்தைத் தஞ்சமடைந்தார். தத்துவ ஞானி ஹ்யூம் அவரை ஆதரித்தார். இங்கிலாந்திலிருக்கும் பொழுதுதான் 'கன்ஃபெஷன்ஸ்' என்ற நூலை எழுத ஆரம்பித்தார். ஹ்யூமுக்கும் அவருக்கும் மனத்தாங்கல் ஏற்படவே, மீண்டும் பிரான்சுக்குத் திரும்பி வந்தார். பிரான்சிலிருந்த நண்பர்கள் பலரையும் விரோதிகளாக்கிக் கொண்டார். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் மனைவி தெரிசா, ஒரு குதிரைக்காரப் பையனிடம் பகிரங்கமாகவே உறவு பூண்டு, அவரைச் சித்ரவதைக்கு உள்ளாக்கினாள். 1778-ம் ஆண்டு, ரூசோ காலமானர். காக்காய் வலிப்பாலோ அல்லது தற்கொலை செய்து கொண்டோ அவர் மரணமடைந்திருக்க வேண்டுமென்று டாக்டர்கள் நம்பினர்!

'கன்ஃபெஷன்ஸ்' என்ற அவருடைய நூல் பொறுப்பற்ற அவருடைய இளம் பருவ வாலிப லீலைகளை உள்ளபடியே எடுத்துரைக்கிறது. ரூசோவை உணர, அவர் சாதனைகளை அறிய, 'எமிலி' 'சமுதாய ஒப்பந்தம்' ஆகியவற்றைப் படித்தால் போதும். 'கன்ஃபெஷன்ஸ்' படித்து விட்டு ரூசோவிடம் மரியாதை செலுத்துவது கஷ்டம்! "மனிதன் இயற்கையில் நல்லவன்; நாகரிக சாதனங்களைப் பயன்படுத்தி சமூகம் அவனைக் கீழ்மகனாக்குகிறது" என்றும், "ஒரு நாட்டின் எந்தக் குடிமகனும் பிறரை விலைக்கு வாங்குமளவுக்குப் பணக்காரனாயிருக்கக் கூடாது; யாரும் தன்னை விலை பேசுமளவுக்கு ஏழையாகவும் இருக்கக்கூடாது." என்றும் புரட்சித் தத்துவங்கள் பேசி, மனிதர்களை அரசியல் விழிப்படையச் செய்து, மாபெரும் புரட்சி ஒன்றுக்கு வித்திட்டு, மனித வரலாற்றைத் திசைமாற்றிய ரூசோ ஒரு சிந்தனைச் சிற்பி! உலகச் சிந்தையாளர்களில் — அரசியல் மேதைகளில் கல்வி நிபுணர்களில் — வரலாற்று ஏடுகளில்—அவருக்கு சிறப்பான இடம் உண்டு.

சிநதனையாளர்கள் ரூசோ, வால்டேர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்து, அமெரிக்க சுதந்திரப் போரிலும் பிரஞ்சுப் புரட்சியிலும் நேரடியாகவே தொடர்பு கொண்டிருந்த மற்றொரு சிந்தனையாளர் தாமஸ் பெய்ன். அவர் ஒரு ஆங்கிலேயர். ஆங்கில சர்க்கார் சிப்பந்தியாக வேலை பார்த்து வந்த பெய்ன் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அமெரிக்கா சென்று 'பொது அறிவு' என்ற துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டார். அமெரிக்கர்களின் சுதந்திர உணர்ச்சியை ஆதரித்து எழுதப்பட்ட நூல் அது. அமெரிக்க

[தொடர்ச்சி பக்கம் 12]

கனியாத கனி; கிழட்டுக் கொள்கை! தனிநபர் சுதந்திரம் - எனும் கருத்து!

தி.மு.க: என்னப்பா சுதந்திரா? என்ன ஓரேயடியாக இளைத்திருக்கிறாயே?

சுதந்திரா: பிறப்பே அப்படித் தானப்பா......சரி, எனக்குக் கொஞ்சம் அதிகப்படியான வேலை இருக்கிறது.

தி.மு.க; என்ன ஏதாவது நன்கொடை வசூலுக்காக மில் பக்கம் போகிறீர்களா?

சுதந்: அதெல்லாம் இப்போது அவசியமில்லை. சென்னையில் மாநாடு கூட்டப் போகிறோம், கனஜோராக!

தி.மு.க: கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போல்....

சுதந்: இந்தா, நிறுத்தப்பா கிண்டலை! உங்களுக்குக் குறையாத அளவில் நாங்கள் வசூல் செய்து காட்டுவோமப்பா! நீங்கள் 30 ஆயிரம் ரூபாய் மீத்துக் காட்டினால், நாங்கள் லட்சம் காட்டுவோமாக்கும்!

தி.மு.க: பணம் தானே, லட்சம்? மக்களல்லவே?

சுதந்: ஆரம்பத்தில் எல்லாக் கட்சியிலும் ஆள் சேராமல் தான் இருக்கும்.

தி.மு.க: உண்மைதான்; ஆரம்பத்தில் மற்ற கட்சிகளுக்கு ஆட்கள் சேராமல் இருக்கலாம். காரணம், அதை ஆரம்பித்தவர்கள் சாமான்யர்கள். ஆனால் உங்கள் கட்சியை ஆரம்பத்த முதல்வர், சுதந்திரத்திற்கு முன்பே முதன் மந்திரியாய் இருந்தவர், கவர்னராய் இருந்தவர், கவர்னர் ஜெனரலாய் இருந்தவர். மற்ற தலைவர்களோ விவசாயக் கட்சியை நடத்திய பேராசிரியர்கள், பெருந்தனக்காரர்கள் இவர்களுக்கு ஆள் சேராமலிருக்கலாமா? லட்ச லட்சமாகப் பணம் மாத்திரம் சேரலாமா?

சுதந்: பணம் சேருவது எங்கள் குற்றமா? எங்கள் சுதந்திராக் கட்சி வாங்கித் தரும் 'சுதந்திர'த்திற்காக மக்கள் தரும் பரிசு!

தி.மு.க: என்ன சுதந்திரமப்பா புதிதாக வாங்கித் தரப்போகிறார் உங்கள் தலைவர் ராஜாஜி? அவரே முப்பது வருடங்களுக்கு முன்பு 'சுதந்திரம் வேண்டுமா? அப்படியெனில் சேருங்கள் காங்கிரசில்!' — என்று கூறியவர் தானே? மக்கள் அவர் பேச்சை நம்பினார்கள். காங்கிரசின் செயலுக்கு ஆதரவு காட்டினார்கள். இப்போது 'ஐயோ, காங்கிரசை நம்பாதீர்கள். என்னை நம்புங்கள்; சுதந்திரம் வாங்கித் தருகிறேன்!' — என்கிறார். ராஜாஜியின் எப்போதைய பேச்சை நம்புவார்கள் மக்கள்? பதவியிழக்காதவரை 'இதுதான் சுதந்திரம்; 'இதுதான் சுதந்திர நாடு' — என்று கூறிவிட்டு பதவியிழந்த பிறகு 'இதுவா சுதந்திரம்; இதுவா சுதந்திர நாடு?'—என்று கூறும் தலைவரை நம்பினால் என்ன சுதந்திரமப்பா வரப் போகிறது?

சுதந்: தனி நபர் சுதந்திரம்!

தி.மு.க: தனி நபர் சுதந்திரம் என்றால் என்ன?

சுதந்: அதாவது தனி நபருக்கு உரிய சுதந்திரங்களைக் காப்பாற்றும்....

தி.மு.க: அத்தனை தூரம் ஏன் சுற்றி வளைக்கிறாய்? தனி நபருக்குரிய சொத்து சுகங்களைக் காக்கும் கட்சி — என்று கூறலாமே. இல்லை என்று மறுக்கலாம், நீ! சொல்லாதது —என்று வாதாடலாம், நீ! என்றாலும் உன் கட்சியின் அங்கங்களைப் பார்க்கும்போது, உங்களைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருப்போரைப் பார்க்கும்போது உங்கள் கட்சி எதற்காகப் பாடுபடுகிறது என்று விளக்கிவிடும் நண்பனே!

சுதந்: தவறு! தவறு!

தி.மு.க: ஆம்; தவறுகளையே அடிப்படையாகக் கொண்டவர்களின் கூடாரம்தான் உங்கள் கட்சி! தங்களைப் பாதுகாப்போரின் கட்சி நிழலைத் நாடி ஓடும் கூட்டம்தான், பணக்காரக் கூட்டம்! அந்தக் கூட்டம் தானப்பா உன் கட்சியின் பெருங்கூட்டம்!

சுதந்: இருக்கலாம். ஆனால் தனி நபர் சொத்துரிமை எண்ணம் பல நூறு ஆண்டுகளாக இருந்துவிட்டது. அதைப் பலாத்காரமாகக் களையக் கூடாது—என்று எங்கள் தலைவர் ராஜாஜி சொல்வதில் என்ன தவறிருக்கிறது?

தி.மு.க: தவறிருக்கிறதோ; இல்லையோ; மக்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.

சுதந்: ஏன்?

தி.மு.க: இதே ராஜாஜிதான் பொதுவுடமை பற்றி தம்முடனிருந்த ராஜீய கைதிகளுக்குச் சிறையில் கூறி யிருக்கிறார்: 'தனி மனிதர்களுக்குச் சொத்துரிமை உண்டு — என்ற தத்துவத்தை அஸ்திவாரமாகக் கொண்டே, தற்போதைய ஜன சமூக வாழ்க்கை அமைந்திருக்கிறது. தனி மனிதர் சொத்துரிமை எண்ணம் நம் நாடி நரம்புகளில் ஊறிப் போய் இருக்கிறது. இந்த எண்ணத்தை வேரோடு கல்லி எறிய வேண்டும்!' இது நேரு பேசவில்லை, நண்பனே! தனி மனிதன் சொத்துரிமை வேண்டும்—என்று சொல்லாமற் சொல்லும் உங்கள் ராஜாஜி கூறியது தான்! இதற்கென்ன பதில்?

சுதந். அது...அது...!

காங்: குழம்பாதே நண்பனே; நன்றாக நினைத்துப் பார். எத்தனை ஆண்டுகளாக உங்கள் ராஜாஜி உழைக்கிறார்! எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறார்! இரவு பகல் எனப் பாராது இந்தியாவையே சுற்றி யிருக்கிறார்? எத்தனை ஆழமான அறிவு! அவர் வகிக்காத பதவி உண்டா? எல்லாவற்றிற்கும் உயர்ந்த கவர்னர் ஜெனரல் பதவியையே வகித்தவர் சரியான அந்தஸ்து பெற்றாரா? இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில் அவர் உழைப்புக்குத் தகுந்த மதிப்புப் பெற்றாரா? இல்லை! இல்லை! ஏன்? அவர் தென்னாட்டுக்காரர் என்ற காரணம் இருக்கலாம்! ஆனால் இன்னொரு காரணமும் இருக்கிறது. இருபத்து நான்கு மணி நேரமும் வெகு பாடுபட்டு தண்ணீர் இழுத்தும் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட மேலே வரவில்லை என்றால் என்ன பொருள்? வாளி, ஓட்டை வாளி என்பது தானே? அதே போல் ஓட்டை உடைசல் கருத்துக்களும், முன்னுக்குப் முரணான கருத்துக்களும இருந்தால் மதிப்பு எங்கிருந்து வரும்?

சுதந்: முன்னுக்குப் பின் முரண் —என்றெல்லாம் ஒன்றுமில்லை; அவர் மனதில் பட்டதைக் கூறுபவர்.

தி.மு.க: மனதில் பட்டதையெல்லாம் கூறுபவன் அரசியல் தலைவன் அல்ல நண்பனே! மனதில் படுவதெல்லாம் அவருக்கு மாத்திரம் ஏன் முன்னுக்குப்பின் முரணாகவே பட வேண்டும்? சிறிதும் தகுதியற்ற மனிதர்கள் தகாத் திருமணங்களைச்சாடி ஒரு தடவை பேசியிருக்கிறார் பார்! 'இன்றையதினம் தனி மனிதர்களுக்கு சொத்து சுதந்திரம் இருக்கிறது. இதனால் தான் தகுதியற்ற மனிதர்கள் எல்லாம் கலியாணம் செய்து கொண்டு விடுகிறார்கள்!' — இப்படிப் பேசிய அதே மனிதர் தாம் சொத்து சுதந்திரம் இருக்க வேண்டும் இப்போது! (தகுதியற்ற கலியாணங்கள நடக்க வேண்டும்) — என்கிறார்.

சுதந்திர: ஆமாம்; நீ இதெல் எங்கு படித்தாய்?

தி.மு.க: 'அபேதவாதம்' — என்ற தலைப்பில் சொத்து சுதந்திரம்' வேண்டாம் என்று எழுதிய நூலிலிருந்து படித்தேன். இதோ அந்த நூல்! ஏன் திருப்புகிறாய்? இன்னொரு நூலும் இருக்கிறதப்பா. இந்திப் பாடப் புத்தகத்தில் இந்தி கற்க வேண்டும் — என்று அவர் எழுதிய முகவுரை! அடடே, ஏன் ஓடுகிறாய், நில் நண்பா!

வசையும் வாழ்த்தும்!

பாக்கிஸ்தான் பிரியும் வரை கூச்சலிட்டார்கள், காது சவ்வுகள் கிழியும் வரை! பாரதம்—எனும் பசு மாட்டை வெட்டுவதா?—என்று கண்ணீர் சிந்திக் கேட்டார்கள். முஸ்லீம் லீக்கின வேகத்தைத்தணிக்க காந்தியார் பலமுறை தன்னைப் பட்டினிப் போட்டுக் கொண்டார். நேரு சூறாவளி சுற்றுப்பயணம் நடத்தி, 'பாக்கிஸ்தான் கருத்து படுநாசக்காலர்களின்கருத்து!' என்று பிரச்சாரம் செய்தார். பாபு ராஜேந்திர பிரசாத் பாகிஸ்தான் கொள்கைக்கு வரிக்கு வரி, எழுத்துக்கு எழுத்து பதில் தந்து வாதம்செய்தார், 'இந்தியா இரண்டு நாடுகளா?' —என்ற பெரும் புத்தகத்தில்! இவர்களுக்குத் துணையாக நின்றது கம்யூனிஸ்ட் கட்சி!

ஆனால் இன்று பாக்கிஸ்தான் அதிபரை வரவேற்க விமான நிலையத்தில் நெடுநேரம் காத்துக் கிடந்தாராம் நேரு! பாபு ராஜேந்திர பிரசாத் தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். பாக்கிஸ்தான் கம்யூனிட்டுகள்(?) பாக்கிஸ்தான் அதிபரின் பயணம் நல்லுறவை வளர்க்குமெனக் கருதுகிறார்கள்.

அன்று, பாக்கிஸ்தானில் சரக்குகள் தேங்குகின்றன. மக்கள் திண்டாடுகின்றனர். குழப்பப் பாதையில் அவர்கள் — என்ற முறையில் கேலி பேசினார்கள் பாரத தேசத்தினர்.

இப்போது...தக்காளி ரசத்தில் அதிகமான தண்ணீரைக் கலந்து விட்டதற்காக ஒரு ஓட்டல்காரரை பாக்கிஸ்தான் போலீஸ் கைது செய்து இருக்கிறது!

ஆனால் இங்கே சர்க்கரையில் வெண் மணல்! அரிசியிலே கல்! காப்பியில் புளியங்கொட்டை!.......பொதுவாக உணவுப் பண்டங்களில் கலப்படம்!

இது வெட்டப் படாத பாரத தேசமென்ற பெயருடைய நாட்டின் நிலைமை! வெட்கம்! வெட்கம்!

21. புலவர் துரோகியா?

மன்னனின் முகத்தில் சினத்தின் சாயல் மின்னலிடுவதை முத்துநகை கண்டாள் எனினும் அதுபற்றி எதுவும் பேசாமல் இருந்துவிட்டாள்.

அவளுக்கு எதிரே வந்து கம்பீரமாக அமர்ந்த கரிகாலன், விழிகளையுருட்டி மாளிகைச் சுவர்களை ஒருமுறை பார்த்துக் கொண்டான். அவளை அவனால் நேரடியாகப் பார்க்க இயலவில்லை. வேறுபுறம் திரும்பியவாறே, "ம்! பிறகென்ன சொன்னார், அந்தப் பாண்டிய நாட்டு ஒற்றர்?" என்று கேள்வி எழுப்பினான்.

"என்னிடம் வேறு எதுவும் சொல்லவில்லை, அரசே! இப்போதுதான் சந்திக்கப்போகிறீர்களே; அப்போது தங்களிடம் விபரம் சொல்வார் என்று எண்ணுகிறேன்!" என்றாள் அவள்.

"உனக்கு அந்த ஒற்றரைப் பற்றிய எல்லா விபரங்களும் தெரியுமா?"

"முழு விபரங்கள் தெரியாது. பாண்டிய நாட்டு மண்ணுக்காகப் பாடுபடக்கூடிய உத்தமர் என்பது மட்டும் நன்றாகத் தெரியும்!"

"எத்தனை ஆண்டு காலமாக பாண்டிய நாட்டில் ஒற்றர் வேலை பார்க்கிறாராம்?"

"நான் அதையெல்லாம் கேட்கவில்லை, அரசே!"

"நீ சோழ நாட்டுக்காக உயிரையும் தியாகம் செய்யக்கூடிய உத்தமியென்று அந்த ஒற்றர் நம்பியிருக்கிறாரா?"

"என்னை அவர் புரிந்து கொள்ளாவிட்டால் இவ்வளவு தூரம் வந்திருப்பாரா?"

"இன்று ஒற்றரைப் பார்த்து முடிந்த பிறகு உன்னை உன் வீட்டுக்கே அனுப்பிவிடுவதாக முடிவு கட்டியிருக்கிறேன்!"

"ஏன் மன்னவா? என் பணியில் என்ன பழுது கண்டீர்கள்? நான் செய்த தவறென்ன?"

"பணியில் பழுதில்லை பாவையே! உன் தந்தையின் கவலையைப் போக்குவதற்காகவே உன்னை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறேன். அது மட்டுமல்ல; நானும் ஒற்றரும் சந்தித்த பிறகு செழியனை எப்படியும் மீட்டே தீருவோம். அதற்கான திட்டங்களைப் பாண்டிய நாட்டுத் தளபதியுடனும் ஒற்றர் வீரபாண்டியுடனும் வகுப்பதாக இருக்கிறேன். இனி உனக்குச் சிரமம் தேவையில்லை அல்லவா?"

"வேந்தே! செழியனை மீட்பது மட்டுமல்ல என் வேலை! சோழத் திருநகரில் தாங்கள் நினைக்காத இடங்களில் துரோகிகள் தோன்றியிருக்கிறார்கள். அவர்களைக் கூண்டோடு பிடிக்கும் வரையில் எனக்கு ஓய்வில்லை!"

"வெளுத்ததெல்லாம் பால் எனக் கருதும் உன்னைப் போன்ற வெள்ளை உள்ளங்கள் அந்த வேலைக்குத் தகுதியில்லை என்பது என் எண்ணம்!"

இந்தப் பதிலைக் கேட்டதும் முத்துநகைக்கு முகம் கறுத்து விட்டது. கண்கள் கலங்கிவிட்டன.

ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "மன்னர் மன்னவா! என்னை மன்னித்து விடுங்கள். என் பணிக்குத் தங்களின் துணையில்லாவிட்டாலும் தனியொருத்தியாக நின்று சோழ நாட்டுப் புகழைக் காப்பாற்றப் போராடியே தீருவேன்!" என்று குரல் தழுதழுக்கக் கூறினாள்.

அப்போது புலவர்வீட்டுக்குச் சென்ற வீரன் திரும்பி வந்து, கரிகாலனிடம், "அரசே! புலவர், முக்கியமாக யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறார். விரைவில் வருவதாக அறிவித்தார்!" என்று கூறினான்.

வீரன், முத்துநகைக்கு நேராக அந்தச் சேதியைச் சொன்னது சோழனுக்குப் பிடிக்கவில்லை. அந்த ஆத்திரத்தில் வீரனைப் பார்த்து "அப்படி யாருடன் அவ்வளவு முக்கியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்?" என்று வினவினான்.

வீரன் சொன்னான், "அவரும் ஒரு யவனக் கிழவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்." என்று!

அந்தப் பதில் வெளிவந்தது தான் தாமதம்; "அகப்பட்டுக் கொண்டான் இருங்கோவேள்! அரசே! இப்போதே படைகளை அனுப்பி அந்த யவனக் கிழவனைக் கைது செய்ய உத்திரவிடுங்கள்!" என்று முத்துநகை கத்தினாள்.

"என்ன சொல்கிறாய்?" என்று அரசன் வியப்புடன் கேட்டான்.

"ஆம் அரசே! அந்த யவனக் கிழவன்தான் இருங்கோவேள்! இத்தனை நாளும் தங்களிடம் மறைத்து வைத்திருந்த உண்மையை இப்போது வெளியிட்டுத் தீர வேண்டிய நேரம் வந்துவிட்டது. என் தந்தை காரிக்கண்ணனார் இருங்கோவேளின் உற்ற நண்பர். சோழ நாட்டுக்குத் துரோகி! இருங்கோவேளும் என் தந்தையும் இரவு நேரங்களில் வெகுநேரம் கூடிக் கூடிப் பேசி சதித் திட்டங்கள் வகுத்ததை நானே நேரில் கண்டிருக்கிறேன். இதோ. இந்தப் பதக்கத்தைப் பாருங்கள். என் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்து விட்டுப்போன யவனக் கிழவரிடமிருந்து கீழே விழுந்த பதக்கம் இது. இதில், 'இருங்கோவேள்' என்ற எழுத்துக்களைப் பாருங்கள். இன்னும் என்ன சான்று வேண்டும், அரசே? மகளே, தன்னுடைய தந்தையைத் துரோகியென்று கூறுகின்ற அற்புதத்தைக்கண்டு திகைக்கிறீர்களா? திகைக்க வேண்டாம். உடனே வீரர்களை அனுப்புங்கள். அந்த வேங்கை தப்புவதற்குள் பிடித்து வரச் செய்யுங்கள்." என உணர்ச்சிப்பொறி பறக்க முழங்கினாள் முத்துநகை.

கரிகாலன் அலட்சியத்தோடு பலமாக சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்து, "பைத்தியக்காரி! இருங்கோவேள் இப்போது உன் வீட்டில் இல்லை. என் வீட்டில்தான் இருக்கிறான். பகைவன் அமர்ந்திருப்பது பாட்டுத் தந்தையின் வீட்டில அல்ல! நாட்டுத் தந்தையின் வீட்டில்! துரோகத்துக்குத் துணை போவது உன் தந்தையல்ல — நீயேதான்!" என்று கூறினான்.

அது கேட்டு முத்துநகை, துடித்து விட்டாள். "அரசே! என் தூய்மையை சந்தேகிக்காதீர்கள்!" என்று அவன் காலைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறத் தொடங்கிவிட்டாள்.

"முத்துநகை! விரைவில் விளக்கம் பெறுவாய்! வா என்னோடு! நீ அழைத்து வந்துள்ள ஒற்றர் வீரபாண்டியை சந்திக்கலாம்; வா!" என அவளை அழைத்துக் கொண்டு கரிகாலன் அந்த இடத்தை விட்டு அகன்றான.

ஒற்றரைச் சந்திப்பதற்கான இடம் ஏற்பாடாயிற்று. வட்ட வடிவமான அந்த இடம் பளிங்குக் கற்களால் அமைந்திருந்தது. ஆனைத் தந்தங்கள் பொருத்தப்பட்ட அழகிய கதவுகள்—அதில் இடையிடையே தங்கத்தால் ஆன குமிழ்கள்! சுவர்களின் ஓரத்தில் பட்டுத் திரைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்தத் திரைக்குப் பின்னால் ஓங்கிய வாளுடன் வீரர்கள் நிற்பதை யாரும கவனிக்க இயலாது நடுவே இரண்டொரு வெள்ளி இருக்கைகள போடப்பட்டிருந்தன. பழங்களும் கனிச்சாறும் இருக்கைகளுக்கு நேரே வைக்கப்பட்டிருந்தன.

இரண்டு வீரர்கள் ஒற்றரை மிக்க மரியாதையுடன் அழைத்து வந்து இருக்கையொன்றில் அமர வைத்தனர். சற்றுநேரத்திற்கெல்லாம் அரசரும, முத்துநகையும் அங்கு வந்து சேர்ந்தனர். அரசரைக் கண்ட ஒற்றர் எழுந்து நின்று வணங்கினார்; அரசன் அங்கு நின்ற இரண்டு



வீரர்களையும் சைகை காட்டி வெளியே அனுப்பி விட்டான். கதவுகளும் சாத்தப்பட்டன. திரைமறைவில் நின்ற வீரர்கள் மூச்சுவிடும் ஒலிகூட வெளியே கேட்காமல் அவ்வளவு எச்சரிக்கையாக இருந்தார்கள். ஒற்றரை உட்காருமாறு கூறிவிட்டு அரசன் அமர்ந்தான். ஒற்றனின் முதுமைத் தோற்றமும் முக பாவமும் கரிகாலனுக்கு வெறுப்பைத் தந்தது என்பதை முத்துநகை புரிந்து கொண்டாள். அவளுக்கு இந்தச் சந்திப்பின் முக்கியத்துவம் பற்றிய கவலையெல்லாம் பறந்தோடி விட்டது. கரிகாலன் பேசிய மொழிகள் அவளை மிகவும் கலவரப்படுத்தியிருந்தன. இவ்வளவு நல்லெண்ணத்துடன் நாட்டுக்குத் தொண்டாற்ற முன்வந்தும் இறுதியில் பழி வந்து சேர்ந்ததே என வருந்தினாள். வேதனைப்பட்டுப் புழுங்கினாள். கரிகாலன் ஒற்றனுடன் பேச ஆரம்பித்தான்.

"வயதான காலத்தில் பாண்டிய நாட்டுக்காகத் தாங்கள் படும் கஷ்டத்தை முத்துநகை சொல்லக் கேட்டேன். மிக்க மகிழ்ச்சி!"

அந்தப் பாராட்டுரைக்கு ஒற்றர் பதில் கூறவில்லை. நன்றியோடு சிரித்துக் கொண்டார்.

"இப்போது என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பியது எதற்காக?"

இதற்கும் ஒற்றரிடமிருந்து பதில் இல்லை.

முத்துநகை திகைத்தாள்.

கரிகாலன் விடவில்லை. மீண்டும் கேள்வி போட்டான்.

"மிகவும் ரகசியமாக ஏதாவது பேச வேண்டுமோ? முத்துநகையையும் வெளியே அனுப்பி விடட்டுமா?"

இதற்கும் பதில் இல்லை.

முத்துநகை அதிர்ச்சி அடைந்தாள். அரசன், ஒற்றரையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒற்றரின் விழிகள் அரசரையே நோக்கின. பட்டுத் திரைக்குப் பின்னுலிருந்த வீரர்கள் பாய்வதற்குத் தயாராக இருந்தார்கள். முத்துநகையின் கருவிழிகள் சுழன்றன. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஒரே அமைதி! அந்த அமைதியில்தான் எவ்வளவு பயங்கரம்!

முத்துநகையின் பார்வை ஒற்றரைவிட்டு நகராமல் அப்படியே நிலைத்து நின்றது. அவள் கண்கள் இருண்டு விட்டன. சிறிது நேரத்தில் எதிரே ஒன்றும் தோன்றவில்லை. உட்கார்ந்திருந்த ஒற்றன் கம்பீரமாக எழுந்தான். எழுந்த வேகத்தில் இடுப்பில் சொருகியிருந்த கட்டாரியை உருவிக் கொண்டு கரிகாலன் மீது பாய்ந்தான். கட்டாரியால் கரிகாலனின் நெஞ்சில் பலங்கொண்ட மட்டும் குத்தினான்!

ஆனால் கரிகாலனுக்குச் சிறு காயமும் ஏற்படவில்லை. மார்பில் மறைந்திருந்த கவசம் கட்டாரியை முனை மழுங்கச் செய்தது. அதற்குள் திரை மறைவில் இருந்த வீரர்கள் வெளிப்பட்டனர். ஒற்றனை வளைத்துக் கொண்டனர். முத்துநகைக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கரிகாலன் உயிர் தப்பி நிற்பதையும், தன் அன்பு அத்தான் வீரபாண்டி கைது செய்யப்பட்டு நிற்பதையும் கண்டு, தணலில் நிற்பதுபோல் நின்றாள்,

அரசன், அவளைப் பார்த்து, "முட்டாள் பெண்ணே! நீ அழைத்துவந்த ஒற்றன் யார் என்று தெரிகிறதா? வீரபாண்டியல்ல என்பதைப் புரிந்துகொள்! வேடமிட்டு என்னைக் கொல்லவந்த இருங்கோவேள் இவன் தான்!" என்றுகூறி அவன் தலைமுடி, உடை முதலியவற்றைப் பற்றியிழுத்து வேடத்தைக் கலைத்துவிட்டான்.

என்ன ஆச்சரியம்!]

அரசன் எதிர்பார்த்தபடி அவன் இருங்கோவேளுமல்ல—அவள் நினைத்திருந்தபடி அவன் வீரபாண்டியுமல்ல! அரசன் திகைத்து நின்றான். முத்துநகை கூச்சலிட்டாள்.

"அரசே! இவன் நான் அழைத்துவந்த ஒற்றர் வீரபாண்டியல்ல! வேந்தர் பெருந்தகையே! நான் தங்களிடம் இன்னொரு உண்மையையும் கூறுகிறேன். வீரபாண்டி கிழவர் அல்ல. கிழவர் போல வேடமிட்டுத் தங்களைக் காணவந்தார். அவரல்ல இது! எப்படியோ அவர் மறைக்கப்பட்டு அந்த வேடத்தில் இந்தக் கொலைகாரன் வந்திருக்கிறான்!"

முத்துநகையின் கூச்சலைக் கேட்ட அரசர், குழப்பமுற்றவராய் "இப்போது நீ என்ன உளறுகிறாய்?" என்று கத்தினார்.

"என்னை மன்னித்துவிடுங்கள். வீரபாண்டியும் நானும் காதலர்கள். அந்த விஷயத்தைத் தாங்கள் புரிந்துகொள்ளக் கூடாதே என்பதற்காகவே அவர் கிழவேடம் கட்டிக்கொண்டு தங்களைக் காணவந்தார். இடையில் இந்த விபரீதம் எப்படி ஏற்பட்டது என்று எனக்குப் புரியவில்லை!" என்று விம்மி விம்மி அழுதாள் முத்துநகை.

"நீ யார்? உண்மையைச் சொல்!" என்று அந்தக் கொலைகார இளைஞனை மிரட்டினான் அரசன்.

அவன் பதில் பேசவே மறுத்துவிட்டான்.

"ம்! இவன் நகக்கண்களில் ஊசி ஏற்றுங்கள். உண்மையை வரவழையுங்கள்!" என்று கர்ச்சித்தான் கரிகாலன்.

"அய்யோ—சொல்லிவிடுகிறேன்!" என்று ஆரம்பித்தான் அந்தக் கொலைகாரன். அனைவரும் என்ன சொல்லப்போகிறான் என்று ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

"நான் இருங்கோவேள் மன்னரின் ஆள்! கரிகால் மன்னரைக் கொல்வதற்காகவே இங்கு வந்தேன். மன்னரைக் கொல்வதற்கு நியமிக்கப்பட்ட ஆட்களில் நான் ஒருவன். இதோ இந்த முத்துநகையும் இவள் குறிப்பிட்டாளே வீரபாண்டியென்று; அந்த மனிதனும் ஒரு பாழ் மண்டபத்தில் உட்கார்ந்து அரசரைச் சந்திக்கப்போவதாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதை நான் ஒளிந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் எங்கள் இருங்கோவேள் மன்னரின் குதிரை வீரர்களை விட்டு முத்துநகையையும் வீரபாண்டியையும் ஏமாற்றினோம். முத்துநகை, வீரபாண்டியைப் பிரிந்து குதிரை வீரர்கள் போகும் திக்கைக் கவனித்துக் கொண்டிருந்த நேரம் பார்த்து வீரபாண்டியைப் படுகாயப்படுத்திவிட்டு அவன் போட்டிருந்த உடைகளை நான் மாட்டி வேடம் போட்டுக் கொண்டு, காயமடைந்த வீரபாண்டியையும் தடாகத்தில் தள்ளிவிட்டு, முத்துநகையை ஏமாற்றி இவளுடன் இந்த மாளிகைக்குள் நுழைந்துவிட்டேன். பாவம்; இவளுக்கு இந்த விபரம் எதுவும் புரியாது. தன் காதலன்தான் கிழவேடத்தில் இருப்பதாக அழைத்துவந்துவிட்டாள்!"

இந்தச் செய்தியைக் கேட்டதும் முத்துநகை பழைய நிகழ்ச்சியை எண்ணிப் பார்த்தாள்.

கொலைகாரன் சொன்னது எல்லாம் சரிதான்! குதிரை வீரர்களின் ஒலி கேட்டுத்தான் பார்க்கப் போன போதுதான் தன் அத்தானுக்கு அந்த விபரீதம் ஏற்பட்டிருக்கிறது என்று அவள் முடிவு கட்டிக்கொண்டாள்.

"அய்யோ! இந்நேரம் என்ன ஆனாரோ தெரிவில்லையே!" என்று வாய் விட்டுக் கதறத் துவங்கினாள்.

கரிகாலன், அந்தக் கொலைகாரனைப் பார்த்து, "உன்பெயர் என்ன" என்று விசாரித்தான்.

[தொடர்ச்சி பக்கம்—12]



சென்னை மாநகராட்சி மேடையில் அறிஞர் அண்ணாவும், மற்றும் கழக முன்னணி வீரர்களும் வீற்றிருக்கும் காட்சி

பாலில் நஞ்சு கலப்போரே; 'பத்திரிகா தர்மம்' பாழ்; பாழ்!

மதுரைத் 'தினமணி'யும்கூட மூடப்பட்டது!

காரணம், அங்கு தீப்பிடித்துக் கொண்டதாம்!

தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தார்களாம்!

அதனால் சர்க்கார் பத்திரிக்கை அலுவலகத்தை இழுத்து மூடி விட்டார்களாம்! சீல் வைத்துவிட்டார்களாம்!

பத்திரிகையில் வேலை செய்த ஆசிரியர், துணையாசிரியர்களை சாராயம் சாப்பிட்ட காரணத்தால் கைது செய்துவிட்டார்களாம்!

முதலாளியை லாக்கப்பில் வைத்திருக்கிறார்களாம்!

இந்தச் செய்தி நம்பத் தகாதது; நாசகரமானது என்று உண்மையை உணர்ந்தவர்கள் கூறலாம். சென்னைத் தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து ஏப்பமிட்டு விட்டு, மதுரையில் இறங்கியிருக்கிற 'தினமணி'யின் பேயாட்டம் நின்று விட்டதோ?—தொழிலாளர் இயக்கம் வென்றுவிட்டதோ?—எனப் பூரிப்புக் கொள்ளுவார்கள் பலர். ஆனால், இந்தச் செய்தி, திசைமாறித் தடுமாறும் தினமணியின் இதயத்தில் ஒரு அறை அறைந்து, அங்கே கட்டியாயிருக்கும் கொழுப்பைக் கரைத்திடத்தான் வெளியிடப்பட்டது—என்பதை அவர்கள் அறிய வேண்டும்!

வேண்டுமென்றே வெளியிடப்பட்ட கற்பனைச் செய்திதான் இது—ஏன் இவ்வளவு காரமாக எழுதிட வேண்டிய அவசியம் வந்தது என்பதை 13—10—59 தேதி வெளியூர் 'தினமணி'யைப் படித்தவர்கள் புரிந்து கொள்ளலாம்!

அந்தப் பத்திரிக்கையின் இரண்டாம் பக்கத்தில் — ஏழாம் கலத்திலே, ' வெளியிடப்பட்ட செய்தி இது:

கோவில்பட்டி தி.மு.க. கலைக்கப்பட்டது!

கோவில்பட்டி: அக்-8. கோவில்பட்டி அழகிரி திடலில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டத்திற்கு நகர பஞ்சாயத்து உறுப்பினர் ஸ்ரீ. பொன்னுசாமி தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள். பி. ஜெயச்சந்திரன், பூவண்ணன், கலிங்கன் முதலியோர் பேசிய பின் கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில் நாட்டில் பிரிவினை உணர்ச்சி வலுத்து வருவதாகவும், இந்தியா ஐந்தாறு துண்டுகளாகப் பிரிந்துவிடுமென்றும், வருங்காலம் நாட்டில் தி.மு.க. விற்குப் பெருத்த அளவில் ஆதரவு இருக்கும் என்றும் நேருவுக்குப் பின் அண்ணாத்துரைக்கே மதிப்பிருக்குமென்றும் பேசினார்.

— 'தினமணி' வெளியிட்ட இந்தச் செய்தியை மீண்டுமொரு முறை படித்துப் பாருங்கள்; பின்னர் அப் பத்திரிக்கை இட்டிருக்கும் தலைப்பைப் பாருங்கள்!

ஏதாவது தொடர்பிருக்கிறதா; ஒட்டிருக்கிறதா; உறவிருக்கிறதா? — ஒன்றுமேயில்லை.

கழகக் கருத்துக்களை நாவலர் எடுத்தோதியிருக்கிறார். கூட்டம் இனிதே நடந்திருக்கிறது என்றாலும் தினமணி தன் அகம்பாவத்தால், ஆணவத்தால், இன்னும் சொன்னால், திமிர் பிடித்த செயலால்,

கோவில்பட்டி தி. மு. கழகம் கலைக்கப்பட்டது.

— என்று கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டிருக்கிறது! ஏனிந்த வெறிச்செயல்?

தினமணி பத்திரிக்கை தன் காங்கிரஸ் பக்தியை மேலிடத்திற்குக் காட்டி, அதன்மூலம் ஏதாவது வசதிகள் கிட்டாதா?-என்ற இழி நினைப்புத்தான் இந்த இழி செயலுக்குக் காரணமா?

இல்லை; தினமணி — எக்ஸ்பிரஸ் தொழிலாளர்களின் கோரிக்கைகளை கூட்டத்திற்குக் கூட்டம் வலியுறுத்துவதோடு, அவர்களை வாட்டிடும் முதலாளியின் கல்நெஞ்சத்தை எடுத்தியம்பி வருகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியில் முட்டுக்கட்டை போட வேண்டும் — என்ற எண்ணமா?

வளர்ந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வந்தால் தங்களின் வயிற்றுக்கு உணவிடும் வடநாட்டு முதலாளியின் கொட்டம் அடங்குமோ?— நம் சல்லாபக் கூட்டம் சிறைக்கோட்டம் போக நேருமோ? — என்றெண்ணி 'கோவில்பட்டி கிளை அழிந்தது'—என்று எழுதி முதலாளியிடம் பாராட்டு வாங்கிட நினைத்த ஆசிரியர் குழாமின் செயலா?

என்னென்ன உள் காரணமோ நாமறியோம். ஆனால் அவர்களின் உள்ளத்திலே அழுக்கு மண்டியிருப்பது மாத்திரம் உறுதி. இம்மாதிரி தூசுகளையும் மாசுகளையும் அவர்கள் நம் மீது வீசுவது இதுவல்ல முதற் தடவை! எண்ணத் தொலையாத தடவை வீசியிருக்கிறார்கள்.

சிறு தவறுதான்; களைந்துவிடக் கூடியதுதான் என்றாலும் ஏனிந்த அலட்சியம்? தி. மு. க என்றால் கிள்ளுக் கீரையோ?

அஜீர்ணத்தால் காலும் கையும் வீங்கியோர் நாலுபேர் உட்கார்ந்து பார்க்கும் கலா க்ஷேத்ர நிகழ்ச்சி முதற் பக்கத்தில், முழு உருவப் படத்துடன் இடம் பெறும்!

பொழுது போகாத சில பொக்கை வாயர்கள் கூடி வாழ்க்கையில் விழுது விடாத தத்துவங்களை, பழுதுபட்ட கருத்துக்களைப் பேசிக் கொள்ளும் 'தத்துவ விசாரணைக் கூட்டங்கள்' முதற் பக்கத்தில் நாலு கலத்தில் பெரிய அளவில் வெளிவரும்.

அந்தக் குமாரி, இந்தக் குமாரி என்று பெரிய அளவில் போட்டோப் போட்டுவரும்; கூட்டமோ கையைப் பிடித்து இழுத்துக் கூட்டிச் சேர்த்ததாக இருக்கும்.

அவர்களுக்குப் பிடித்த கட்சிக் கூட்டத்தில் ஆயிரம்பேர் கூடினாலும் பெருங்கூட்டம் என்று பெரிதாக எழுதித் தீர்ப்பார்கள்!

நம்மவர் கூட்டம், ஒரு லட்சம், இரண்டு லட்சமெனச் சேர்ந்தாலும் கூட்டத்தின் சிறப்பைப் போடுவதில்லை; குறைந்த அளவு கூட்டம் நடந்ததையாவது போடுவார்களாயென்றால் அதுவும் இம்மாதிரி விஷம வேலைகள் செய்துதான் பிரசுரிப்பார்கள்!

விஷமத்தைக் கண்டித்து நாமோ, வேறு சிலநாளிதழ்களோ எழுதினால் 'ஐயோ பத்திரிக்கா தர்மம் போயிற்றே!' — என்று கதறுவார்கள், திருடனே நீதியின் தேவை பற்றிப் பேசுவதுபோல!

எப்படியோ அவர்களுக்கு நெஞ்சழுத்தம் அதிகம்! இலட்சக் கணக்கானவர்களைப் புறக்கணித்து, அவர்களின் கட்சியை இலட்சியப்படுத்தாது, அவர்களின் கொள்கைகளை மறுத்துக் கொண்டு இன்னும் ஒரு பத்திரிக்கை தமிழகத்தில் உலவுகிறதென்றால் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்தான்!

சென்னையில் தொழிலாளர்களைப் பழிவாங்கிவிட்டு, வேறோர் இடத்தில் பத்திரிக்கை நடத்தி, தொழிலாளரையும், சர்க்காரையும் எள்ளி நகையாடிய வண்ணம் பீடுநடை போடுகிறதென்றால் தமிழ்நாட்டிற்கே உரிய ஆச்சரியம் தரும் செயல்தான் இது!

சமயம் வாய்க்கிறபோது இயக்கத்திற்கு இழுக்குச் சேர்க்கும் வகையில் இம்மாதிரி திமிர்ச்செயல்களைச் செய்துகொண்டு ஒரு பத்திரிக்கை உயிர் வாழ்கிறதென்றால் அது மிகமிக ஆச்சரியமே!

இம்மாதிரி ஆச்சரியங்கள் நீடித்து நிற்பதில்லை! இப்படி ஆச்சரியம் தருகின்றவர்களின் ஆணவக் கழுத்தை ஒடிக்கக் காலம் காத்து நிற்கிறது!

மறைவான இடத்திலே, கண் மயங்கும் வேளையிலே குள்ளநரி வேலைசெய்யும் தேசியப் பத்திரிக்கைகளே!

வளர்ந்துவரும் இயக்கத்திற்கு முன் உம் வாலையாட்டாதீர்கள்! வாய் நீளம் காட்டாதீர்கள்! இந்த அறிவுரைக்கு ஏளனம் காட்டுவீர்களானால் உங்கள் வாழ்நாளின் எல்லை குறுகும்! வால் நறுக்கப்படும்! வெறி ஒழுகும் வாய் கிழிக்கப்படும்!

— அடியார்

கெடுக்காதீர் மாணவரை!

★

"ஆண்டவன்பால் பக்தியுள்ள மாணவர்கள் தாம் தேர்வில் தேறுவார்கள்" — என்ற ஒரு உலகப் பெரும் உண்மையைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார், கனம் பக்தவத்சலம். அவரது அபாரக் கண்டுபிடிப்பிற்கு மாணவர் உலகமே தன் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது!

கேட்பவர் கேட்டால் சொல்பவர் எதையும் சொல்வார்— என்பதற்கேற்ப இன்னும் பல அரிய உபதேசங்களை அவர் கூறுவார் என்று எதிர்பார்க்கிறோம். 'தினமும் ஈசோபநிஷத் படிப்பவர்கள்தான் நாற்பது மார்க் வாங்குவார்கள். பிள்ளையாருக்குத் தோப்புக்கரணம் போடுபவர்கள்தான் ஐம்பது மார்க் வாங்குவார்கள். ஆறுகால பூஜை நடத்துபவர்தான் அறுபது மார்க் வாங்குவார்கள். கையில் திருவோடும் மெய்யில் திருநீறுமாக சுற்றுபவர்கள்தான் நூற்றுக்கு நூறு மார்க் வாங்குபவர்'—என்று கூறினாலும் கூறுவார்!

பள்ளிக்கூடத்துப் பாடத்தை ஒழுங்காகப் படித்து அதில் கவனத்தைச் செலுத்தி தேர்வில் எழுதும் முறை தெரிந்த மாணவன் அவன் 'ஆண்டவர் கூட்ட'த்தை நம்பினாலும் நம்பாவிட்டாலும் தேர்வில் தேறுவான்— என்பதை அமைச்சர் உணராது போனது மிகவும் இரங்கற்குரியது.

எத்தனையோ மாணவர்கள் பிள்ளையாரை நம்பி வழுக்கி விழுந்த கதை உண்டு! பத்ரகாளியை நம்பி பத்துத் தடவை தவறியவர்கள் உண்டு! 'தேங்காய் உடைக்கிறேன்; மாத்தீபம் போடுகிறேன்; நந்தா விளக்கு வைக்கிறேன்'—எனக் காணிக்கை கொடுத்து கெஞ்சிக் கேட்ட மாணவர்களைக்கூட கைவிட்டுவிட்டார், நமது ஆண்டவர்!

ஆண்டவர் பக்தி மாணவப் பருவத்திலேயே ஏற்பட்டால் 'இந்த உலகம் பொய்; இந்தப் படிப்பு பொய்; இந்த வாத்தியார் பொய்; எல்லாம் பொய்! — என்று கொட்டை கட்டிக் கிளம்பி விடவும் கூடும்!

ஆகவே, அமைச்சர் அவர்களே! பேசுவதில் பயனுள்ளதைப் பேசுங்கள். தொடர்பில்லாது பேசி தொல்லைக்குள்ளாகாதீர்கள்! அது உங்களுக்கும் நல்லதல்ல; உலகுக்கும் நல்லதல்ல!

இயல் இசை கூத்து

திரைப்பட உலகத்தை சர்க்கார் ஏற்ருல்...?

திரைப்பட உலகம் சமுதாயத்தின் தொழுநோய்க்காரர்களின் கூடாரம்—என்ற கருத்து மாறி வருகிறது, மெல்ல மெல்ல! அங்கேயும் கொடுக்கும் பண்பும், கொள்கை உரமும் கொண்டவர்கள் உண்டு!—என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

என்ருலும் நாட்டின் பொருளாதாரத்தில பெரும் கேடு பயக்கும் துறையாகவும் இப்போது வளாந்து வருகிறது — என்பது மறுக்க முடியாத ஒன்று!

பெரிய பாத்திரமேந்தி நடிக்கும் ஒரு நடிகர் தம் ஆறுமாத கால உழைப்பிற்கு, அல்லது ஒரு ஆண்டுகால உழைப்பிற்குப் பெறுகின்ற தொகை எவ்வளவு? ஒரு லட்சம், ஒன்றரை லட்சம்! சிலருக்கு இரண்டு லட்சம்கூட கிடைப்பதுண்டு!

அதே நேரத்தில், ஒரு சிறு தொழிற்சாலையில 500 பேர் வேலை செய்து, ஆண்டுக்கு லட்ச ரூபாய் இலாபம் காட்டுவதென்ருல் எளிதான செயலல்ல! பெரும்பாலும் நட்டமே ஏற்படுகிறது, சிறு தொழிற்சாலைகளில்! இத்தனைக்கும் அங்கு இடவேண்டிய மூலதனப் பொருளோ அதிகம்! நடிகன் இடவேண்டிய மூலதனம்....?

தொழிற்சாலை மக்களின் தேவையைப் பூர்த்தி செய்து, அது நட்டத்தில் ஓடுகிறது! பணத் திண்டாட்டம் ஏற்பட்டு தொழிற்சாலை ஸ்தம்பிக்கிறது; மூடப்படுகிறது! அதே நேரம் லட்சக் கணக்கில் ஒரு பக்கம் பணம் சேர்ந்து கொண்டேயிருக்கிறது.

தொழில்கள் வளராது திணறுகின்றன; தொழிலாளர்கள் திடீர் திடீரென வேலை கிடைக்காமல் வீடு திரும்புகின்றனர். அதே சமயம், ஊரையெல்லாம், ஊரிலுள்ள நிலத்தையெல்லாம் விலைக்கு வாங்கும் முயற்சி, பங்களாக்கள், மோட்டார்கள், வருமான வரி அதிகாரியை ஏமாற்ற வீணன செலவுகள், திருப்பதி ஆண்டவனுக்கு நன்கொடைச் செலவு — இப்படி ஒரு பக்கம் பணம் வீணுகிக்கொண்டிருக்கிறது. துறைகள் வேருக இருக்கலாம். ஆனல் அடிப்படை பணம் ஒன்றுதான!

பெரும் பணம் திரைப்பட வுலகில் தேங்கி வழிகிறது. தொழில்களிலும், விவசாயத்திலும் சம்பாதித்த பணத்தை எடுத்துக்கொண்டு, 'படம் பிடிக்கப் போகிறேன்'—என சென்னை ஓடுகிருர்கள்; வீண் செலவுக் கணக்கேட்டில் அந்தப் பணம் ஏறுகிறது! திரும்பி, வந்த இடத்திற்குப் பணம் போவதில்லை! திரையுலகிலும் அதிலுள்ளோரும் பெரும்பாலும் வெளிநாட்டுச் சரக்குகளைத் தானே வாங்குகின்றனர்?

பின்னர் தொழிற்சாலைகளில், விவசாயத்தில் பண நெருக்கடி ஏற்படுகிறது. தொழில் முன்னேற்றம் வீழ்கிறது. நாட்டுப் பொருளாதாரத்தில வீக்கம் ஏற்படுகிறது!

இன்னும் பற்பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம், எப்படித் திரையுலகம் நாட்டுப் பொருளாதாரத்தில் வீக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை விளக்க! நடிகர் மாத்திரமல்ல; பெரும் பணம் பெறுகின்ற எவரும் வீக்கத்திற்குக் காரணப் பொருட்கள்தான. என்ருலும் இவர்களை நோகவோ, இந்த முறையை உடனே இந்தக் கணம் முதல் கைகழுவச் சொல்லவோ முடியாது.

காரணம், இது தனிப்பட்டவர்களின் துறை. தனியார் துறையாக திரைப்படம் இருக்கமளவும் இந்தப் பிரச்னைக்கு முடிவு இருக்காது.

அரசாங்கம் திரைப்படத் துறையை எடுத்துக் கொள்ள வேண்டும், சீர்திருத்திய முறையில் திரையுலகம் திகழ வேண்டும்—என்பது அறிஞர் அண்ணா போன்ருேரின் கருத்து.

ஆனல் சர்க்கார் வசமுள்ள சினிமாத்துறை வெறும் பிரச்சார படமாக மாறிவிடக்கூடாதே—என்பதும் ஜனநாயகவாதிகளின் கவலைகளில் ஒன்று. அதோடு, சம்பளத் திட்டத்தில் வேலை செய்தால் கலை வராது: கலைஞன் தன் திறமையை முழுவதும் காட்டமாட்டான்; சோஷலிச நாடுகளில்கூட தனியார் தொழிலாக சினிமா விளங்குகிறதே!'—என்று சிலர் எதிர்ப்புக் குரல் கொடுக்கக்கூடும். அவர்களுக்கெல்லாம் ஒரே பதில் கீழ்க் காணும் கேள்விதான்! நாட்டின் நலமா; கலையின் அதிவேக முன்னேற்றமா? எது வேண்டும்?

நாட்டின் நலம் வேண்டுவோர் விரும்பும் திட்டம் 'சர்க்கார் வசமுள்ள திரைப்படத்துறை'—தான். என்ருலும் ஆரம்ப காலத்தில் தனித்தியங்கும் 'போர்டின் கீழ் திரைப்படத் துறை இயங்குவதுதான் சாலப் பொருத்தமானது!

ஆக, இன்றிருக்கும் முறை முடிவுபெற வேண்டும், நல்லெண்ணமுள்ள அரசினர் கைக்குத் திரைப்படத் துறைமாற்றப்பட வேண்டும், படிப்படியாக!

ஒரு படத்திற்கு 47 இலட்சங்கள்!

திரையுலகம் கோடிக் கணக்கிலே பணம் புழங்கும் வர்த்தகத் துறையாக இருந்து வருகிறது. மூலதனம் எதுவுமின்றி நடிக நடிகையர் பெரும் தொகையை வருமானமாகப் பெற்று வருகிருர்கள். மற்றவர்கள் கேட்டால் மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு தென்னகத்தில் ஆயிரக் கணக்கில் பணம் பெறுகிருர்கள். வடநாட்டில் பிரபல நடிகர்கள் ஐந்து இலட்சம், ஆறு இலட்சம் என்று கேட்கிருர்களாம்.

ஆனல் ஒரே ஒரு படத்தில் நடிப்பதற்கு 47 இலட்சங்களுக்கு மேல் பணம் பெறுகிற நடிகை ஒருவர் ஹாலிவுட்டிலே இருக்கிருர்!

எலிசபெத். டாய்லர் என்ற அந்த முன்னணி நடிகை 'கிளியோபாத்ரா' என்ற படத்தில் நடிப்பதற்கு 10 இலட்சம் டாலர் பணம் பெற்றுக் கொண்டிருக்கிருர். அத்தொகை 47,05 000 ரூபாயாகும். அந்தப் படத்தை இருபதாம் நூற்ருண்டு பாக்ஸ் கம்பெனியார் தயாரிக்கின்றனர்.



விரைவில் வெளிவர இருக்கின்ற சரவண பிலிம்ஸ் "பாகப் பிரிவினை"யில் சிவாஜி கணேசன் இப்படித் தோன்றுகிருர்—இதன் டைரக்டர் ஏ. பீம்சிங்.

நூலேணி

மனமோகன விடுதி

எழுதியவர்: சந்திரமோகன்

முகப்பிலும் தலைப்பிலும் உள்ள கவர்ச்சி உள்ளே இல்லை. மனமோகன விடுதி என்ற மாளிகையில் ஒரு வாரத்தில் ஏழு விதக் குடும்பங்கள் தங்கியிருந்த காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைக் கூறுவதுதான் கதை. படிக்கப் படிக்க இனிக்கும் சுவையோ, நெஞ்சையள்ளும் நிகழ்ச்சிகளோ சிந்தனையைக் . கிளறிவிடும் கருத்துக்களோ எங்கும் காணப் படவில்லை. விலையும் அதிகம்!

[வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை. 24. விலை. ரு. 1-50.]

புரட்சித் தலைவன் புலித்தேவன்- நாடகம்

எழுதியவர்: வ. வேணுகோபாலன்

புலித்தேவன் செந்தமிழில் வீர முழக்கமிடுகிருன். வெள்ளையர்கள் ஆங்கிலத்திலும் முகமதியர்கள் உருதுவிலும் உரையாடுகிருர்கள். நடிப்பதற்கு சுலபமாக எல்லாம் தமிழ் எழுத்துக்களில் உள்ளன. கட்டபொம்மனையும் எட்டப்பனையும் துரோகிகள் என்றும் புலித்தேவன் சுதந்திரத் தமிழ்நாடு அமைக்க முயன்ருன் என்றும் கற்பித்திருக்கிருர் ஆசிரியர்! தொடக்கு முதல் இறுதி வரை ஒரே போர் முழக்கந்தான். படிப்போருக்கும் "போர்" தான்!

[விலை ரு. 1. கிடைக்குமிடம் சரஸ்வதி டிரேடிங் கம்பெனி, கும்பகோணம்.]

மலைநாட்டு மாவீரன்

எழுதியவர்: சந்திரமோகன்

பிரபல நாவலாசிரியரான சர். வால்டர்ஸ்காட் எழுதிய "தி பிளாக் டுவிப்" என்ற சரித்திரக் கற்பனையை மூலத்தின் சுவை குன்ருமல் இனிய தமிழ்ப் பண்பாடும் நாகரீகமும் மிளிர அருமையான ஒரு வரலாற்றுக் கற்பனையாக்கியிருக்கிருர் மொழி பெயர்ப்பாளர். வீரச் சுவையும் காதற் பெருமையும் விரவி நின்று படிப்போருக்கு மேலும் ஆவலைத் தூண்டும் நடையில் நல்ல விறுவிறுப்பு காணப் படுகிறது. போர் தவிர்க்கப் பட்டுச் சமாதானம் நிலவச் செய்தல் நூலின் பயனகும்.

[வெளியீடு: பிரேமா பிரசுரம், சென்னை. 24. விலை. ரு: 1-50]

தமிழ் நேசன் ஆண்டு மலர்

மலாயா நாட்டு 'தமிழ்நேசன்' ஏடு வெளியிட்டுள்ள மெர்தேகா ஆண்டு மலர் சிறப்பான முறையில் இருக்கிறது. திராவிடத் தலைவர்கள் சிலரின் வாழ்த்து மலருக்கு அழகு சேர்க்கிறது. மற்றும் பல நல்ல கட்டுரைகளும் இருக்கின்றன. வண்ணப் படங்களும், ஓவியப் படங்களும் கண்ணைக் கவருகின்றன. மலாயா நாட்டு மக்களின் குரலையும், அரசினர் குரலையும் பிரதிபலிக்கும் இம்மலர், அந்நாட்டு மக்கள் வாங்கிப் படிக்க வேண்டிய நல்ல மலர்!

சுழல் விளக்கு

மாலுமி

பி. பழனிச்சாமி; திருப்பூர்.

(?) திராவிடம் பிரிந்தால் சிறு நாடாகி விடுவோம்; பெரிய நாடுகள் நம்மீது படையெடுத்து விடும் — என்று கூறுகிறார்களே, ஏக பாரத கட்சிக் காரர்கள்?

இதற்குத்தான் ஆயிரம் முறை ஆதாரங்களோடு சொல்லிவிட்டோமே...பதில். இன்னும் வேண்டுமென்றால் வடக்கே திரும்பி, இமாலயத்தைப் பாருங்கள். இந்தப் பெரிய நாட்டின்—ஏக பாரத நாட்டின்—எல்லையை விழுங்கிக்கொண்டிருக்கிறானய்யா, சீனத்துக்காரன். ஏமாந்தால் படையெடுக்கக்காத்துக்கிடக்கிறான் பாக்கிஸ்தான்காரன். பெரிய நாடாகத்தானே இருக்கிறோம்; படையெடுப்பு நிகழாமலா இருக்கிறது?

க. சந்திரமோகன்; மேலூர்.

(?) சென்னை நகராட்சி மன்றம் சென்று நீங்கள் சாதித்தது என்ன?

கடன்பட்ட நிலையை மாற்றினோம்; கருவூலத்தில் சேமிப்பும் அதிகம் காட்டினோம்! தி. மு. கழகம் பேச மாத்திரம் தெரிந்த கழகமல்ல; ஆளவும் தெரிந்த கழகம் — என்பதையும் நிரூபித்தோம்!

பி. மலையான்; சென்னை—1.

(?) காந்தி கிராமத்திலிருந்து பெண்கள் காங்கிரஸ் பிரச்சாரத்திற்குப் புறப்படுகின்றனராமே?

எப்போதே வெளிச்சமான ரகசியமாயிற்றே! காந்தி பெயரைச் சொல்லிக்கொண்டு, அரசாங்க உதவிப் பணத்தை வாங்கிக் கொண்டு. 'சர்வோதயம்; சர்வோதயம்' — என்று பகல் வேடம் போட்டுக்கொண்டு 'காங்கிரஸ் பிரச்சார மடலாயம்' ஒன்றல்லவா நடக்கிறது, திண்டுக்கல்லையடுத்த காந்தி கிராமத்தில்?

ப. சிவநேயன்; முகலூர்.

(?) குஷ்டரோகிகளை ஒதுக்கி வைத்திருப்பது நல்லதுதானே?

சமுதாயத்தில் அப்படிச் செய்துவிடுகிறோம். ஆனால் அரசியலில் அப்படி இல்லையே! பதவி வெறி—எனும் குஷ்டம் பிடித்தவர்களுக்குத்தானே கடந்த பனிரெண்டு வருடங்களாக ஆட்சிபீடம் சொந்தமாக இருக்கிறது?

சாமியப்பன்; காங்கேயம்.

(?) செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில்தான் எல்லாப் பெரியவர்களும் பிறந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே?

ஆம்; இந்த மூன்று மாதங்களில் முப்பது பெரியவர்கள் பிறந்திருந்தால், முப்பது கோடி பெரியவரல்லாதாரும் பிறந்திருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடாதீர்கள்!

பி. முனுசாமி; சென்னை.

(?) திராவிடநாடு பிரிந்தால் பாகிஸ்தான் பிரிந்தபோது ஏற்பட்டதுபோல் சண்டை ஏற்படுமல்லவா?

இலங்கை பிரிந்ததே இந்தியாவிலிருந்து, அப்போது சண்டை ஏற்பட்டதா? பர்மா பிரிந்ததே, அப்போது சண்டை ஏற்பட்டதா? பாகிஸ்தான் பிரிந்தபோது சண்டை வந்ததென்றால் அதற்குக் காரணம் இரண்டு நாடுகளிலுமுள்ள மத வெறி! [தொட்டும் தொடாமலும் தென்னகத்தில் இருந்து வரும் மதவெறிதான் நம் அறிவுப்பிரசாரத்தால் களையப்பட்டு வருகிறதே!

ஆர். திருவேங்கடம்; நெல்லை.

(?) நம் நாட்டிற்கும் மேல் நாட்டிற்கும் வேலை நேரத்தில் றுமை யுண்டா?

உண்டு; அங்கு வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணி நேரமாயிருப்பதைக் குறைக்கிறார்கள். இங்கு அதிகப்படுத்த வேண்டும்—என அமைச்சர்கள் அலறுகிறார்கள்!

கே. குருசாமி; தேவாரம்.

(?) 'இந்தியா பழமையில் பற்றுக் கொண்டிருந்ததால்தான் அடிமைப்பட்டு வீழ்ந்தது'—என்று பண்டித நேரு கூறினாராமே?

அந்தப் பண்டித நேரு வேறு; சாதுக்கள் சமாஜத்திலும், ராவணன் பட எரிப்பிலும் கலந்துகொள்ளும் நேருஜீ வேறு!

மி. அழகமுத்து; குளித்தலை.

(?) 'எத்தொழிலையும் இழிவாகக் கருதக்கூடாது!' — என்று அமைச்சர் பேசியிருக்கிறாராமே?

ஆமாம்; அவர்கள் ஆட்சியில் 'இழி தொழில்'கள் செய்பவனை 'இழிமக'னாகக் கருதும் வரை இந்த உபதேசங்கள் சீழ்வடியும் புண்ணுக்குத் தடவிடும் புனுகுதான்!

ஆர். பழனி; தென்னூர்.

(?) சீனாக்காரன் கேட்கும் இந்தியப் பகுதியின் அளவென்ன?

பாரதத்தாயின் கைப் பகுதியில் 40,000 சதுர மைல்கள்!

செந்தாமரை; காஞ்சி.

(?) அறிஞர் அண்ணா கசாப்புக் கடை வைக்கச் சொன்னதாக வெளியில் தூற்றித் திரிகிறார்களே அமைச்சர்கள்; ஏன்?

வெளியில் அப்படித்தான் பேசுவார்கள். ஆனால் அண்மையில் அமைச்சர் சுப்பிரமணியம் 'ஆடு அறுக்கும் தொட்டி'க்குச் சென்றாராம். ஆடு அறுப்பதைக் கூர்ந்து கவனித்தாராம். 'கசாப்புக் கடை' வைக்கத் தகுதியும் திறமையும் பெற்று வரும் அவர்கள் அண்ணா அவர்களுக்கு நன்றி செலுத்த நிச்சயம் வருவார்கள்.

தமிழ்த்தாசன்; புளியம்பட்டி.

(?) திராவிடம் விடுதலையடையப் பாடுபடுபவர் திராவிட மொழிகளை அறிந்திருக்க வேண்டுமா?

அது அவசியமில்லை; விடுதலையுணர்வு போதும்! இந்தியத் துணைக் கண்டம் விடுதலையடையப் பாடுபட்ட தலைவர்கள் இந்திய மொழிகள் அனைத்தையும் கற்றுத் தெளிந்தவர்கள் அல்ல; இன்னும் சொன்னால், தங்களை ஆண்டு கொண்டிருந்தவர்களின் மொழியில்—ஆங்கில மொழியில்தான் பேசினார்கள்; எழுதினார்கள்; எழுச்சியை உண்டாக்கினார்கள்!

டி. மணி; திருவையாறு.

(?) நபிகள் நாயகத்திற்கும் மற்ற சமயத்துறைத் தலைவர்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

மற்ற சமயத்துறைத் தலைவர்கள் மனிதனுக்கு 'மத'த்தை ஏற்படுத்தினார்கள்; நபிகள் நாயகம் மார்க்கத்தைக் காட்டினார்.

சி. அறிவன்பன்; பிரான்மலை.

(?) 'பத்திரிகைகளைத் தனியாரே நடத்தினால்தான் ஜனநாயகம் வளர்ச்சியடையும்.'—என்கிறாரே பண்டித நேரு?

ஆமாம்; ஜனநாயக வளர்ச்சியும் இருக்கும்; அதே சமயம் காங்கிரசின் செல்லப்பிள்ளைகளான டாட்டா, பிர்லாக்கள் அதிலேயும் கொள்ளை இலாபம் அடிக்க வசதியும் இருக்கும்!

பி. மயில்வாகனன்; கருவலூர்.

(?) இந்திய அரசினரின் செய்திப் படம் எதையெதையெல்லாம் காட்டுகிறது?

* முதலில் நமக்குப் புரியாத இந்தியில் யார் டைரக்ட் செய்தது, யார் படப்பிடிப்பாளர் என்றெல்லாம் எழுதிக் காட்டுகிறார்கள்.

* நேரு போன இடம்; வந்த இடம்; அஸ்திவாரக்கல் நாட்ட வெள்ளிக் கரண்டி தூக்கிய விதம்; திறப்புவிழா நடத்த வெள்ளிக் கத்தரிக்கோலால் நாடாக் கத்தரித்த முறை; இங்கிதத்தோடு வெளி நாட்டுக்காரரோடு அளாவளாவும் பாங்கு!

* அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் வடநாட்டுத் தலைவர்கள் திண்டு தலையணைகளில் புரண்டுக் கொண்டு மலர்ச் செண்டுகளை வீசி விளையாடும் கண்கொள்ளாக் காட்சி.

* பம்பாய்க்கும் பஞ்சாப்புக்கும் நடக்கும் கால்பந்து போட்டி.

—பொதுவாக காங்கிரஸ் அரசினரின் 'பாரதிய சமாச்சார் சித்ரா' — நமக்கெல்லாம் 'வெளி நாட்டுச் செய்தி'ப் படமே!

பி. சாமுவேல்; கரூர்.

(?) தசரா திருவிழாவின் முக்யத்துவம் என்ன?

பலி கொடுக்கப்பட்ட 10 லட்சம் ஆடு மாடுகள், பறவைகளின் இரத்தம் பெருக்கெடுத்ததாம், வடக்கே! காளி, பத்ரகாளி, துர்கா, காட் ஆகிய தேவதைகள்தான் பெருக்கும் அந்த இரத்தத்தைஉறிஞ்சிக் குடித்த தசராத் தெய்வங்கள்!

அக்ரமம்; ஆனால், உண்மை!

தென்னாட்டிற்கு வந்தார் காந்தி. தேம்பியழும் மனிதனையும் அவனை வாட்டிடும் வறுமையும் கண்டார். உண்பது நாழி; உடுப்பது நான்கு முழம்—எனும் எளிமையிலும் எளிமையைக் கண்டார்.

தூக்கி எறிந்தார் தான் கட்டியிருந்த 20 முழ முண்டாசை. சட்டையைக் கழற்றி எறிந்தார். கட்டினார் முழங்கால் துண்டை! ஒட்டிய வயிறுடையாருக்குத்தான் என் தொண்டு—எனக் கூவினார்! ஆட்டுப் பாலையும், நிலக் கடலையும் தின்று உயிர் வாழ்ந்தார்.

அவர் எளிமை கண்டு வியந்தார்கள் வெளிநாட்டார்! நாட்டு மக்கள் வாடுகையில் எனக்கேன் ஆடம்பரம்?—என்று அதற்கு விளக்கம் தந்தார்.

இது கடந்த காலம்!

★ ★ ★

அவருடைய சீடர்கள் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தனர். முரட்டுக் கதருடை அணிந்தவரெல்லாம் மினுமினுக்கும் பட்டு உடுத்தலானார். கடுவெயிலையும் குளிரையும் தாங்கிக் கொள்ள வேண்டியவர்கள் 'குளு குளு' அறையில்லாது ஒருகணம் வாழ முடியாது என்று கூக்குரல் எழுப்புகின்றனர்.

இது அவர்களின் தனிப்பட்ட வாழ்வு கலந்த பிரச்னை—எனத் தள்ளி விட்டாலும், பொது வாழ்வில் காந்தி சீடர்கள் புரிகின்ற வீண் செலவுகள், ஆடம்பரச் செலவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சோகக் கதை சொல்லும்.

★ ★ ★

ராஜஸ்தானை அடுத்த நாகவுர் எனும் சிற்றூர். அதில் காந்தி ஜெயந்தி கொண்டாடினார்கள். அதற்கு நேரு வர இருந்தார். எனவே, ஊரெல்லாம் சீர்திருத்தப்பட்டது. வரவேற்பு வளைவுகள், வாண வேடிக்கைகள், விளக்கு வரிசைகள் இன்னும் பலப்பல!

நேரு வந்தார்; எளிமையான முறையில் ஒரு குத்து விளக்கை ஏற்றி வைத்தார்; காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டது! திரும்பிப் போய் விட்டார்! அரை மணி நேர விழாதான் அது!

இந்த எளிமையான முறையில் கொண்டாடப்பட்ட இந்த விழாவிற்கு— அரை மணி நேரமே நடந்த இவ் விழாவிற்கு—எளிமையின் சின்னமாய் விளங்கிய காந்தி ஜெயந்திவிழாவிற்கான செலவு எவ்வளவு தெரியுமா?

ஆம்; அரைமணி நேர விழாவிற்கு 5 லட்சம் ரூபாய்கள்!

அத்தனையும் பொதுப் பணம்; பொது மக்கள் பணம்! தாங்குமா ஏழை நாடு?

கலப்படம்

உச்சவரம்புத் திட்டங்கள்; ஊராள்வோர் கவனத்திற்கு!

உச்ச வரம்பு கட்ட வேண்டும்; நிலத்திற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும் — என்ற குரல் உழவர் மக்களிடமிருந்தும் மக்களுக்குத் தகுந்தபடி வேடத்தை மாற்றிக் கொள்ளும் மந்திரிமார்களிடமிருந்தும் புறப்படுகிறது.

'உச்ச வரப்பா, ஐயோ, பாரதம் — எனும் பச்சைக் குழந்தைக்குப் பருத்த உடல் கொண்டோனின் சட்டையா?' ஆகாது; கூடாது—என்ற, கூச்சல் நிலத் திமிங்கலங்களிடமிருந்தும், மந்திரிப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்களிடமிருந்தும் கிளம்புகிறது!

இதைத் தவிர இன்னும் வேடிக்கையான பற்பல கூக்குரல்கள் 'உச்சவரம்பு வேண்டும்; வேண்டும்!" என்று கிளம்புகின்றன.

கூச்சல் ஒன்று

இந்த உச்சவரம்புக் கூச்சல் கிளம்பும் இடம் பெரும்பாலும் வடநாடு! எதுபற்றிக் கிளம்புகிறது இந்த உச்சவரம்புக் கூச்சல்? வெள்ளத்திற்கு உச்சவரம்பு கட்ட வேண்டும் — என்பதைப் பற்றிதான்.

நிலம் கிடக்கிறது ஏராளமாக! நீர்வளமும் உண்டு! என்றாலும், பாவம், பரிதாபத்திற்கு உரியவர்களின் நாட்டில் வெள்ளமல்லவா புகுந்து விடுகிறது, திடுமென!

வெள்ளம் புகுவதற்குமுன் அந்தப் பகுதிகளிலிருந்து வந்த பேரொலியைக் கேட்டால் அது பட்டினியின் குரலாக, பஞ்சத்தின் கூவலாகத்தான் இருக்கும்.

ஆனால், அறிவிப்பு வரும், வெள்ளம் புகுந்து விட்டதாக! படகுகள் கவிழ்ந்தன! பிற பகுதிகளுக்கு உணவுப் பொருட்கள் ஏற்றிச் செல்லும் தோணிகள் மூழ்கின! சாமான் கப்பல்கள் குடை சாய்ந்தன! நிலமெல்லாம் வெள்ளக் காடு! நீரிலெல்லாம் நீந்தி வாழ்ந்திடும் மனித ஜீவன்கள். மூச்சடைத்து செத்தவர். மூழ்கி மூழ்கி இறந்தோர் — இப்படி நெஞ்சை உருக்கும் சேதிகள் வரும். அதோடு உண்டியல் பெட்டியும் வரும்!

"பணம் தருவீர் — வெள்ளத்தால் பரிதவிக்கும் (என் வட நாட்டு) மக்களுக்கு!" என்று ஊருக்கு ஊர் பறந்து பறந்து பேசுவார் பண்டிதர்! உணவுப் பொட்டலங்கள் விமானத்திலிருந்து வீசப்படும்! வீசப்படுகின்ற பொட்டலங்கள் அடிபட்டு இறந்து விழுந்தான் மனிதன்—என்கிற சேதியும் வரும்!

இத்தனையும் உள்ளடக்கி 'உச்ச வரம்பு கட்டுக வெள்ளத்திற்கு!' —என்ற கூச்சலும் பிறக்கிறது!

(வெள்ளத்திற்கு உச்ச வரம்பு கட்ட 'வெள்ளக் கட்டுப்பாடு கமிட்டி'—என்ற ஒரு அமைப்பே இருக்கிறது.)

கூச்சல் இரண்டு

இக் கூச்சலை எழுப்பியவர் ஒரு அமைச்சர். அவர் யாரை எதிர்த்து இந்தக் கூச்சல் எழுப்புகிறார்? முதலாளிகளை எதிர்த்து!

ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! காங்கிரஸ் அமைச்சர் முதலாளிகளை எதிர்த்துக் கூச்சல் எழுப்புவதா? நடக்க முடியாத காரியம் தான்! ஆனாலும் நடந்திருக்கிறதே?

நடக்கமுடியாத, ஆனால் நடந்திருக்கிற அந்தக் கூச்சல் காரியம் தான் என்ன?

'முதலாளிகளே! இலாபம் பெறுங்கள். ஆனால் மக்களிடமிருந்து கொள்ளை இலாபம் அடிக்காதீர்கள்!'

—இப்படிப் பேசுபவர் மத்திய மந்திரி பட்டீல்தான்!

முதலாளிகளை இலாபம் பெறச் சொல்கிறார் மந்திரி! இலாபம் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறாரா? இல்லை; இல்லை! ஒரு முதலாளி ரூபாய்க்கு நாலணா லாபம் வேண்டும் என்பான்; மற்றவன் எட்டணா வேண்டுமென்பான்! ஒருவன் முக்கால் ரூபாய் வேண்டுமென்பான்! இன்னொருவனோ ரூபாய்க்கு ரூபாய் லாபம் வேண்டுமென்பான்! இதில் எது இலாபம் —எது கொள்ளை இலாபம்?

'இதையெல்லாம் ஏன் குடைந்து குடைந்து கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? சும்மா இந்தக் கம்யூனிஸ்ட்டுகள் பேச்சைக் கேட்டு யாரும் மயங்கிப் போகாமலிருக்கத்தான் இப்படிப் பேசுவது! எங்கள் கட்சி வளர யார் பணம் கொடுப்பது? பணக்காரர்கள் தானே அவர்களை மறப்போமா? அத்தனை ஏன், சமீபத்தில் பிரதம மந்திரியின் தேசிய நிவாரண நிதிக்கு யார் யார் பணம் கொடுத்தார்கள் — என்று தெரிந்தால் இப்படிக் கேட்பீர்களா?' — என்பார் அமைச்சர்!

அப்படி தேசிய நிவாரண நிதிக்குப் பணம் தந்தவர்களின் பட்டியல்; வட நாட்டு முதலாளிகளின் பட்டியல் இதோ!

பம்பாய் சர் தோராப்ஜி. ஜே. டாட்டா டிரஸ்ட் ரூ. 20000.

பம்பாய் சர். ரட்டன் டாட்டா டிரஸ்ட் ரூ. 5,000.

பம்பாய் இந்துஸ்தான் லிவர் லிமிடெட் ரூ. 20,000.

ப்ம்பாய் மெஸ்ஸர்ஸ் கமானி பிரதர்ஸ் ரூ. 1,00,000.

இத்தனைக்கும் மேலாக, 'இந்திய தேசியக் காங்கிரசின் 'போஷக'ரும், 'தர்மதாதாவு'மான ஜி. டி. பிர்லா—எனும் வட நாட்டுப் பெரு முதலாளி தர இருப்பது ஒரு லட்சம் ரூபாய்!

இதையெல்லாம் பார்க்கும் போது மந்திரியின் குரல் தவறாகத் தென்படலாம்! ஆனால் கொஞ்சம் மாற்றிக் கொண்டால் போதும், இந்தப் பாப காரியங்களுக்குப் பொறுத்தமாக இருக்கும்!

'முதலாளிகளே!......கொள்ளை லாபம் அடிக்காதீர்கள்! அப்படித் தப்பித் தவறி அடிப்பீர்களானால் அதில் ஒரு பகுதியை (எதிர்க் கட்சியினர் மொழியில் ஒரு 'எலும்புத் துண்டை')—இங்கே வீசி எறியுங்கள்!'

— என்பதே சரியானதாகும்! ஆனால் இதில் லாபத்தில் உச்ச வரம்பு வேண்டும் — என்ற ஒலி குறைகிறதே? அதற்கு யார் என்ன செய்வார்கள்?

கூச்சல் மூன்று

இது அனுமந்தய்யாவின் குரல்! அமைச்சர்களின் அடிவயிற்றைக் கலக்கும் குரல்! உண்மையின் குரல்!

"மந்திரிமார்களின் பதவிக் காலத்திற்கு ஒரு உச்ச வரம்பு கட்டியே ஆக வேண்டும்!"

உண்மைதான்! கண்டது கடியதற்கெல்லாம் உச்சவரம்பு கட்டிக் கொண்டு, ஆனால் நில உச்ச வரம்பு கட்ட நாளையும் நம்மையும் ஏய்த்துப் பத்தாண்டு பதினைந்து ஆண்டுகளாக மந்திரிமார்களாகவே இருந்து வரும் மந்திரிகளின் பதவிக் காலத்திற்கு உச்ச வரம்பு கட்டவேண்டும்!—என்கிற இந்தக் குரல் மிகச் சுவை தரும் குரல்!

'நான் மூன்று மந்திரி சபைகளில் இருந்தேன்' 'நான் இரண்டு மந்திரி சபைகளில் பதவி வகித்தேன்'—என்று கூறி தளுக்கித் திரிவோர் அதிகம் நாட்டிலே! 'சுதந்திரம் வந்த பிறகு நான் இரண்டு தடவை மந்திரிசபை அமைத்தேனாக்கும்!' என்று கித்தாப்பு மட்டும் பேசிக் களிப்போர். எதிர்க்கட்சிகளைப் பார்த்துக் கனைப்போர் ஏராளம்!

மலிவாகிவிட்ட இந்தப் பழமை மாற வேண்டும். எம். எல். ஏ-க்களுக்கு ஒரு தடவைக்குமேல் நிற்கக் கூடாது—என்று கூறும் மந்திரிகள் பத்து வருடமாக எப்படிப்பதவியில் ஒட்டிக்கொண்டே இருக்கலாம் என்ற நியாயமான கேள்வி எழுகிறது!

இதைவிடச் சுவைதரும் குரல் தமிழகத்தில் ஒலிக்கிறது! அது மக்கள் மன்றத்தின் குரல்!

"இந்த மந்திரிகளின் பதவி காலத்திற்குதான் நீங்கள் உச்ச வரம்பு கட்டச் சொல்கிறீர்கள். நாங்கள் சொல்கிறோம் இந்த மந்திரிமார்களின் மந்திரிப் பதவி காலத்திற்கே 'முடிவு' கட்ட வேண்டுமென!"

முன்னாள் மந்திரி அனுமந்தய்யாவின் கருத்தைவிட இது இனிக்கிறது, நமக்கு!

இன்னுமா வரவில்லை?

✻

தமிழ் அறிஞர்களுக்குள் எப்போதும் ஏதாவது சண்டை நடந்துகொண்டேயிருக்கும்! அதில் சில சமயங்களில் பிற மொழி வெறியர்களும் பங்கெடுத்துக் கொளவார்கள், இது தமிழ் காக்கும் அரங்கில் நடப்பது!

ஆனால் தமிழ் மானத்தைக் காக்காத கம்பன் தீட்டி உருவாக்கிய இராமாயணத்தைப் பேசிச் சலிக்கும் மேடையில் புகுந்து விட்டது, இந்தச் சண்டை! வீபீஷணன் உயர்ந்தவனா; கும்பகர்ணன் உயர்ந்தவனா — எனும் தலைப்பில் வாதிட்டார்கள், கம்பரசத்தில் குளித்து மூழ்கிய பெருமக்கள்!

அதில் ஒருவர் கும்பகர்ணனே உயர்ந்தவன் எனப் பேசிடும் பேராசிரியர் எழுந்தார்!

'விபீஷணன் துரோகி, அண்ணனைக் காட்டிக் கொடுத்தான். வடவன் தாள் தொழுதான். அவனா உயர்ந்தவன? அண்ணன் செய்வது தவறாக இருந்தாலும், தவறை இடித்துக் காட்டிய கும்பகர்ணன் அல்லவா உயர்ந்தவன்? மாற்றான் என் அண்ணனை எதிர்ப்பதா?—என்று படையெடுத்த கும்பகர்ணன் துரோகி விபீஷணனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு உயர்ந்தவன்!' என்று உணர்ச்சி பொங்கப் பேசினார் அந்தப் பேராசிரியர். பாவம், அவரை அறியாமலேயே அறிவுலக வாடை வீசி விட்டது!

கம்பனின் தொண்டரடிப் பொடியாழ்வார்களின் 'மகராசா'வாய் விளங்கும் தலைவர் எழுந்தார். கும்பகர்ணனை ஆதரித்துப் பேசியது எப்படித் தவறு என்று கூறினார். அந்தக், கூட்டத்தின் 'அனுமார் பக்தி'யை காட்டிக் கொண்டார்.

கம்பரைக் கட்டியழும் இத் தமிழ்ப் பண்டிதர்கள் கொஞ்சம் வடக்கே திரும்பட்டும். பண்டித நேரு முதற்கொண்டுபாமரர்வரை இவர்களின் கும்பகர்ணர்களை, இராவணர்களை நிற்க வைக்கிறார்கள், தீ வைக்கிறார்கள்! அவை சாம்பலாகும் மட்டும் சுற்றிச் சுற்றி வந்து 'ஆப்ரிக்க நடனம்' ஆடுகிறார்கள்!

பண்டிதர்கள் இங்கே கும்பகர்ணன் உயர்ந்தவன் என்று வாதாடுகிறார்கள். ஆனால் வடக்கே — நம்மை ஆளும் பீடமிருக்கிற வடக்கே பண்டிதர் தீ மூட்டுகிறார்கும்பகர்ணர்களுக்கு, கண்ணை மூடிக்கொண்டு.

இதைப் பார்த்த பின்னுமா உங்களுக்கு இரத்த வியர்வை வரவில்லை? இதயம் துடிக்கவில்லை? இனப்பற்று முளைக்கவில்லை?

சிங்காரச் சென்னை நகரிலே சிங்க இளைஞர் கூட்டம்!

'ஆள்கின்றார் வேற்றார் இங்கே என்றால் ஆண்மை செத்ததடா!—எனவே எமை ஆள வருவீர்'—என நம்மை அழைத்த சென்னை, கடந்த வாரம் மக்கள் கடலில் மூழ்கிற்று. சென்னை மாவட்ட மூன்றாவது மாநாடு எஸ் ஐ. ஏ. ஏ. திடலில் நடந்த போது!

அலங்காரப் பந்தல், அதிலே தீபாலங்கார வேலைகள், கோட்டையென நிமிர்ந்து நிற்கும் வாயில், பகைவரின வெத்து வேட்டை மதியாது உள்ளே வரும் மக்கள் வெள்ளம்!—இத்தனையும் நோக்கும்போது மகிழ்ச்சியால் கண்கள் விரிந்தன; இதயம் விரிந்தது; இலட்சியம் தெரிந்தது!

இத்தனைக்கும் முத்தாய்ப்பு வைத்தாற்போல் 15—ந் தேதி மாலை சென்னை நகரைக் குலுக்கியது ஊர்வலம். தலைவர்கள் முன் செல்ல, விடுதலைத் தானையின் முழக்கங்களோடு ஊர்வலம் சென்ற காட்சி, கண்டவர்களும் விண்டுரைக்க முடியாத பெருங் காட்சி!

அடுத்தநாள் அக்டோபர் 16—ந் தேதி மாநாட்டின் நிகழ்ச்சி துவங்கிற்று. மாவட்டச் செயலாளர், செயல் வீரர், மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர், தோழர் கோ. செங்குட்டுவன் வரவேற்றார், வந்திருந்தோரை!

மாநாட்டைத் திறந்து வைத்த சகோதரர். இராம. அரங்கண்ணல் சென்னையின் சிறப்புகளை எடுத்தோதி, அரசியல் சந்து முனை சிந்துபாடிகளின் கூற்றுகளைப் பிளந்தெறிய மாநாட்டின் கருத்துப் படையல்கள் பயன்படுமென்றும் கூறினார்.

அடுத்து. பலரும் வாழ்த்துரை வழங்க மாநாட்டுத் தலைமைப் பொறுப்பேற்றார், சிந்தனைச் செல்வர் டி. கே. சீனிவாசன்! அன்றையதினம் அவர் ஆற்றிய தலைமையுரை. விடுதலைப் போரில் வென்று திரும்புவோருக்கு என்றென்றும் பயன்படும் நல்லதோர் படைக் கருவியாக இருந்தது.

பின்னர் இரண்டு நாட்களிலும் கழக முன்னணி வீரர்கள் பல்வேறு சுவையான தலைப்புக்களில் கருத்து விருந்தளித்தனர்.

முதல்நாள் இரவு இசைச் செல்வர். சி. எஸ். செயராமன் அவர்களின் இன்னிசை படைப்பையும் மாநாட்டிற்கு வந்திருந்தோர் ஏற்று மகிழ்ந்தனர்.

அடுத்து. மு. கருணாநிதி எழுதி நடித்த கொள்கை விளக்க நாடகமாம் 'உதயசூரியன்' முரசொலி நாடக மன்றத்தினரால் சிறப்புற நடத்திக் காட்டப்பட்டது.

இரண்டாம் நாள், இசை முரசு நாகூர் அனீபாவின் இசை விருந்து நடைபெற்றது.

அன்று முற்பகலில் கழகக் காவலரும் நாவலருமான பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் பேருரை நிகழ்த்தி, மாநாட்டுப் பந்தலிலுள்ளோர் எழுச்சியும் மகிழ்ச்சியும் கொண்டு மகிழச் செய்தார்.

இரவு, மக்கள் கூட்டம் எதிர் பார்த்த புரட்சி நடிகர் எம். ஜி. ரசமச்சந்திரன் நான்கு மாதங்களுக்குப் பிறகு முதன் முறையாக பொது நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியது எல்லோருக்கும் மகிழ்ச்சி தந்தது.

அடுத்து. திராவிட பூபாகத்தின் ஒரே ஒரு காவலரும், புலவர்களுக்குள் தலைவராய், தலைவர்களுக்குள் புலவராய் விளங்கும் பேராசானுமாகிய அறிஞர் அண்ணா உரையாற்றினார். 'திராவிட முன்னேற்றக் கழகம் தியாகங்களின் அடிப்படையில் வளர்கிறது. மேலும் வளர, மென்மேலும் தியாகங்களுக்குத் தயாராகிக் கொள்வீர்!' — என்று உணர்ச்சி முரசம் அறைந்தார். மாநாட்டில் 30,000 ரூபாய் செலவு போக மீதியாயிற்று — என்று அறிவிக்கப்பட்டது.

திருச்சி எஸ். ஏ. பி. ராபி, காமாட்சி, அம்பில் தருமலிங்கம் ஆகிய தோழர்கள் நடித்த 'பரப்பிரம்மம்'—எனும் நாடகம் அன்று நடிக்கப்பெற்றது.

இனிதாக முடிந்த இம் மாநாட்டின் வெற்றிக்கு இணை எதுவுமில்லை—எனக் கூறும்படி, கோ. செங்குட்டுவன் அவர்களைத் தலைவராகவும், கே. எம். கண்ணபிரான், வி. இளஞ்சேரலாதன் ஆகியோரை செயலாளராகவும், மேயர் அ. பொ. அரசு அவர்களைப் பொருளாளராகவும் தி. சு. நல்லதம்பி அவர்களைத் தொண்டர் படைத் தலைவராகவும் கொண்ட மாநாட்டு வரவேற்புக்குழு பணியாற்றியது; மாநாட்டினர் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டது!



கொடியேற்றுவிழா நடந்தபோது, மாநாட்டுத் திறப்பாளர் தோழர் இராம. அரங்கண்ணலும், தலைவர் டி. கே. சீனிவாசனும்!

அந்தோ; அஞ்சல் நிலையமே!

★

வியாழன் அன்று அனுப்பப்படும் 'முரசொலி' தனிப் பிரதிகள் சந்தாதாரர்களுக்கு வெள்ளியன்று கிடைப்பதில்லை. சனிக்கிழமையும் போய்ச் சேருவதில்லை. திங்கள், செவ்வாய் கடந்து புதனன்றுதான் பல ஊர்களுக்குக் கிடைத்து வருகிறது. இந்த நிலை, வேறு கட்சிப் பத்திரிகைகளுக்கு இல்லை.

இதுபற்றி மேலதிகாரிகளுக்குப் பலமுறை எழுதியும், இன்றுவரை வழி கிடைக்கவில்லை; சரியான பதிலும் பெற்றோமில்லை!

வேண்டுமென்றே செய்யப்படும் இந்த அநியாயத்தைக் கண்டித்து விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

வாசகர்கள் பொறுத்தருள்க!

—ஆசிரியர்

மனிதனின் கதை...

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

சுதந்திரப் போர் முடிந்தவுடன் அமெரிக்க அரசாங்கத்தில் அவருக்கு ஒரு வேலை கிடைத்தது. மீண்டும் அவர் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார், 1787-ல் 'மனிதனின் உரிமைகள்' என்ற நூலை வெளியிட்டார். பிரஞ்சு நாட்டின் புரட்சிக்காரர்களை அந்நூல் ஆதரித்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் தன்னைக் கைது செய்துவிடுமோ எனப் பயந்த பெய்ன் பிரான்சுக்குச் சென்றார். அப்பொழுதுதான் புரட்சி அங்கே ஆரம்பமாகியிருந்தது. பெய்ன் புரட்சியில் கலந்து கொண்டார், புரட்சி முடிந்து, பிரஞ்சு மன்னனை விசாரணை செய்ய அமைக்கப்பட்ட கமிட்டியில் பெய்ன் அங்கம் பெற்றார்.

மாதவி, அரசியல் எதேச்சாதிகாரம், முடிமன்னர்களின் சாகசங்கள் இனி செல்லமுடியாது என்ற நிலை ஐரோப்பாவில் பிறந்தது. உலகமே கண்டிராத பயங்கரப் புரட்சி பிரான்சில் தோன்றியது. அது தோன்றிய விதம், நடந்த முறை, ஏற்பட்ட விளைவு மனிதனின் கதையில் சுவைமிக்க கட்டங்கள். அந்தக் காலத்தின் பின்னணியில் எழுந்த கதைகளும், நவினங்களும், வரலாற்று நூல்களும் ஒரு நூல் நிலையமாகவே மாறிவிட்டன. பிரஞ்சுப் புரட்சி....ஆம், மாதவி, அதைக் காண அடுத்த கடிதத்திலிருந்து என்னோடு வா!

அன்புள்ள.

அகத்தியன்

ரோமாபுரிப்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

"வேல்மறவன்" என்று வீராப்புடன் பதில் கூறினான்.

அவனைச் சிறையில் அடைக்க ஆணை பிறப்பித்து விட்டு முத்து நகையைத் தேற்ற ஆரம்பித்தான். அவளோ, தன் காதலனை நினைத்துக் கண்ணீர் வடித்தாள். அந்தக் கவலைக்கிடையேயும், "அரசே! என் வார்த்தையை நம்பி உடனே சென்று அந்த யவனக் கிழவரைக் கைது செய்ய உத்திரவிடுங்கள். அவர் வேறு யாருமல்ல. இருங்கோவேளாகத்தான் இருக்கமுடியும். இங்கே கொலைகாரனை அனுப்பிவிட்டு, இன்பச் சேதி கேட்பதற்கு என் தந்தையிடம் வந்திருக்கிறான். அவன் இருங்கோவேளேதான்! முதலில் அவனை இழுத்து வரச் செய்யுங்கள். அவனைக் கூண்டிலே அடைத்து விட்டுத்தான் என் ஆருயிர்க் காதலன் வீரபாண்டி என்ன ஆனார் என்று பார்க்கப் போகிறேன். அனுப்புங்கள் அரசே, வீரர்களை!" என்று கெஞ்சினாள்.

அரசனும் அவள் பேச்சுக்கிணங்கி, வீரர்களைக் கூப்பிட்டு, "உடனே சென்று புலவர் காரிக்கண்ணனாரையும் அவர் வீட்டில் இருக்கும் யவனக் கிழவரையும் அழைத்து வருக!" என்று கட்டளையிட்டான்.

வீரர்கள் புறப்பட்டனர்.

[தொடரும்]

ரவிமதி பிக்சர்ஸ்

சென்னை—17.

✻

அன்புடையீர்!

திரைவானில் புதிய முயற்சி. எங்கள் வெற்றிக்கு உங்கள் வாழ்த்துக்களைக் கோருகிறோம். சிறந்த நடிகர் நடிகை கொண்ட தமிழ்ப் படத்தை பொங்கல் நன்னாளில் துவக்குகிறோம். மனமுவந்து ஆசியைக் கோருகிறோம்.

சிதம்பரம் ஜெயராமன்
மானேஜிங் டைரக்டர்,
ரவிமதி பிக்சர்ஸ்,
42, உஸ்மான் தெரு.
தி. நகர், சென்னை—17.

ஆசிரியரும் அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.